Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 237 | வெள்ளிக்கிழமை | ஆடி 7 ஆம் நாள் 23 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

**ஒலிம்பிக் இன்று!**

உலகின் மிகப் பழைமையான விளையாட்டு விழா என்று கருதப்படும் ஒலிம்பிக் தொடர், ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இன்று ஆரம்பமாகின்றது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 20)

# கறுப்பு ஜூலை கலவரம்: இன்றுடன் 38 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கை வரலாற்றில், கொடும் இனத்துவேசத்துக்கும் அடக்குமுறைகளுக்கும் வித்திட்ட கறுப்பு ஜூலை நினைவு நாள் இன்று.

19

## மக்களால் விரைவில் அரசு விரட்டப்படும்!

### ஹிருணிகா ஆவேசம்



கொழும்பு, ஜூலை 23

'ராஜபக்ச அரசின் அராஜகங்களுக்கு எதிராக வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியாகப் போராடி வரும் மக்கள், இந்த அரசைக் கூண்டோடு வீட்டுக்கும் விரட்டியடித்தே தீருவார்கள் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி

19

## கொரோனா 1,714

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,714 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. இதற்க

19

## துப்பாக்கியால் சுட்டு சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 23

நாவற்குழியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். கெமுனு வோச் படைப்பிரிவு முகாமில் கடமையிலிருந்த சிப்பாயே உயிரிழந்தவராவார். குறித்த சிப்பாய் இராணுவத்தில்

19



## கொழும்பில் அணிதிரண்ட ஆசிரியர்கள்; ஜனாதிபதி செயலகம்வரை போராட்டம்

கொழும்பு, ஜூலை 23

கொழும்பில் நேற்று அணிதிரண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை திரும்பப் பெறுக்கொள்ளல் ஆகிய கோரிக்கைகளை முன்

19

## தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்!

### ஆசிரியர் சங்கங்கள் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 23

'அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சருடனும், வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஜனாதிபதியுடனும் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக

19

## 4,000ஐ நெருங்கும் கொரோனா சாவு

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 42 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம்

19

### டொலருக்குத் தட்டுப்பாடு


## பால்மா இறக்குமதியை குறைப்பதற்குத் திட்டம்

கொழும்பு, ஜூலை 23

70 சதவீதமான பால்மா இறக்குமதியை நிறுத்த பால்மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று பால்மா இறக்குமதியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் லக்ஷமன் வீரசூரிய தெரிவித்தார்.

நாட்டின் வணிக வங்கிகளில் டொலருக்கான தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக இந்த தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உலக சந்தையில் பால்மா வகைக

19



## 104 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைதானார்!

கிளிநொச்சி, ஜூலை 23

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் இலங்கைக் கடற்படையால் 104 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடல் வழியாக மேற்படி கஞ்சா

19

## யாழ். நகரப்பகுதியில் முதியவர் திடீர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள அங்காடி புடவை வியாபார நிலைய வீதியில் முதியவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீதியில் முதியவரின் சடலமொன்று காணப்படுகின்றது

19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53 பேருக்கு கொரோனாத் தொற்று

# ஒத்துழைப்பற்ற நிலைமையால் நாயாற்றில் கொத்தணி வரலாம்

### தொற்றாளர் தப்பிச்சென்றமை தொடர்பில் சுகாதாரப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஜூலை 23**



**கட்டுப்பாடுகள், ஆவணப்படுத்தல்கள் இல்லாத ஒரு சமுதாயத்திலிருந்து புறப்படுகின்ற பெருந்தொற்று மாவட்டத்திலும் மாகாணத்திலும் நாட்டிலும் பெரும் கொத்தணியை உருவாக்கும். எனவே சுகாதாரம் சாராத மற்றைய தரப்பினரிடமிருந்து மிகுந்த ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்." என்று, முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங்கர் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்று கரையோரப்பகுதியில் இதுவரை 53 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ளவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியானதன்படி 34 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் தலைமறைவாகி உள்ளார் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எதுவித பதிவும் அற்ற நிலையில் நாயாற்று கரையோரப்பகுதியில் பருவகால கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பான விவரம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடமோ, கிராம அலுவலரிடமோ இல்லை. குறித்த பகுதி ஜூலை 3 ஆம் திகதி தொடக்கம் பொது முடக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட 379 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 53 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**எதிர்பாராத சிக்கல்கள்**

நாயாற்றில் எதிர்பாராத சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அங்குள்ளவர்களுடன் திருப்திகரமான தொடர்பாடலில்லை, அதற்கான ஒத்துழைப்பும் இல்லை. இது சுகாதார சேவைக்கு சவாலாகவுள்ளது. தொற்றாளர்களை இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு கூட்டிச் செல்வது பெரும் சிரமமாக வுள்ளது. மாகாண முடக்கம் நடைமுறையில் இருக்கும்போது ஒரு கொரோனா நோயாளி எவ்வாறு புத்தளத்துக்கு சென்றார் என்பது ஆச்சரியமாக இருக்கின்றது. களநிலை சுகாதார உத்தியோகத்தர்கள் அந்த நபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, "பேருந்தில் புத்தளத்துக்குச் சென்றுள்ளேன்" என்று கூறியுள்ளார். ஆனால் அவர் தங்கியிருந்த வாடியின் உரிமையாளர், "தொற்றுக்குள்ளான அந்த நபர் படகுமூலம் கொக்கிளாய் சென்று அங்கிருந்து புத்தளத்துக்கு சென்றுள்ளார்" என்று கூறியுள் ளார். இது போன்ற நிலைமைகள், சுகாதாரப் பிரிவினர் எதிர்கொள்ளும் சவால்களாகவுள்ளன. இதனால் கொரோனா பரவலை நியாயப்படுத்த முடியாது. உரிய அதிகாரிகள் முறையான ஆவணப்படுத்தலை செய்யவேண்டும். என்றார். மாகாண போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதை பொலிஸாரும் இராணுவத்தினருமே கண்காணிக்கின்றனர். இந்த நிலையிலேயே தொற்றாளர் ஒருவர் தப்பிச்சென்றுள்ள நிலையில், சுகாதாரப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (கு-19)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

'சூழலியல் நோக்கில் இயற்கை விவசாயமும் உரப் பாவனையும்' என்ற தலைப்பிலான விசேட சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை (முழுமதி நாள்) நடைபெறவுள்ளது.

இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று பி.ப. 4 மணியளவில் இது நடைபெறவுள்ளது.

தொடக்க உரையை பிரபல எழுத்தாளரும், பொறியியலாளரும், சூழலியலாளருமான ஐ.சாந்தன் ஆற்றுவார். கருத்துரையை எழுத்தாளரும், இயற்கை விவசாய மற்றும் சமூக செயற்பாட்டாளருமான வடகோவை வரதராஜன் ஆற்றவுள்ளார். கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் போதிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (கு)



## குளப்பிட்டி அடாவடி தொடர்பில் மூவர் கைதாகி விசாரணையில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் வன்முறைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள் ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

குளப்பிட்டி சந்தியிலுள்ள புடைவை கடை ஒன்றுக்கு பெற்றோல் குண்டுவீசித் தீமூட்டப்பட்டது. ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூவரே வாள்கள் மற்றும் பெற்றோல்குண்டு சகிதம் கடைக்குள் புகுந்து இந்த நாசகார செயலைச் செய்துள்ளனர். இதன்போது கடையில் இருந்த புடவைகள் மற்றும் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புடைவைகள் உட்பட பல இலட்சம் ரூபா சொத்து தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. தொழில் போட்டி காரணமாக கைக்கூலிகள் மூலம் இந்த அராஜகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சந்தேகநபர்கள் விசாரணையில் உள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-26)

## தப்பியோடிய தொற்றாளர் புத்தளத்தில் கண்டறிவு

முல்லைத்தீவு, ஜூலை 23



முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியிலிருந்து தப்பிச் சென்ற கொரோனா நோயாளி புத்தளத்தில் உள்ளார் என்பதை முல்லைத்தீவு பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாயாற்று பகுதியில் 34 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டநிலையில், ஒருவர் அங்கிருந்து தப்பித்து புத்தளத்துக்குச் சென்றுள்ளார். இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி அவரை புத்தளத்திலுள்ள கொரோணா இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் சுகாதாரத் தரப்பினருடன் இணைந்து பொலிஸா ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு, வீதிசோதனை நடவடிக்கைகள் இறுக்கமாக காணப்படும் நிலையிலும் கடலிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாகாணம் விட்டு மாகாணம் சென்ற கொரோனா நோயாளி தொடர்பில் இன்னும் சர்ச்சைக்குரிய விடயமாகவே பேசப்படுகின்றது. (கு-19)

### முல்லை. மாவட்டத்திலிருந்து

## அபிவிருத்தி அலுவலர்கள் 150 பேர் இடமாற்றம்

முல்லைத்தீவு, ஜூலை 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் கடமையில் ஈடுபட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுமார் 150 பேர் இடமாற்றம்பெற்று அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றியவர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வெற்றிடங்களுக்கு புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு-19)

### சாவகச்சேரி பிரதேச செயலகத்தில்

## மீளவும் மூலிகை ஆவி

சாவகச்சேரி, ஜூலை 23

தென்மராட்சி பிரதேச செயலகத்தில், அலுவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் மீண்டும் நேற்றுத் தொடக்கம் மூலிகை ஆவி பிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் செயலக அலுவலரால் ஆவி பிடிப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஆயுர்வேத அபிவிருத்தி அலுவலர் ஆவி பிடிப்பதற்கான மூலிகை வகைகளை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து ஒரு மாத காலமாக இந்தப் பணி இடம்பெற்று பின்னர் நிறுத்தப்பட்டது.

தற்போது பிரதேச அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பணிக்கு வரும் அனைத்து அலுவலர்களுக்கும் தினமும் மூன்றுவேளை மூலிகை ஆவி பிடிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றது ரெலோ

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தேவையில்லை, சில சரத்துக்களை மாத்திரம் மாற்றம் செய்வதன் மூலம் சட்டத்தை திருத்தி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தலாம் என்கின்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை நிராகரிக்கின்றோம். இந்தச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு."**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"சட்டவல்லுநர்கள், ஜனநாயகவாதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள் ஏன் சர்வதேச நாடுகள் உட்பட பலதரப்புகள் இந்தச் சட்டத்தால் ஏற்பட்ட கடும் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து இதை நீக்குமாறு வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

ஏற்கனவே வீழ்ந்து செல்லும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என புதிய நிதி அமைச்சர் நாட்டுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்தச் சட்டத்தை நீக்காதுவிட்டால் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை நீக்கப்படமாட்டாது. எமது ஏற்றுமதியும் அந்நிய செலாவணியும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். அப்படியான அபாய நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும் பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு வழங்குவது எதற்காக?

ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்குவது வேலிக் கட்டைக்கு ஓணான் சாட்சியாக அமைவதுபோல் இருக்கின்றது.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தால் எமது தமிழினம் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கின்றது. இன்றும் பல தசாப்தங்களாக விசாரணையோ, வழக்குகளோ, பிணையோ இன்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலம்மிக்க இளைய சமுதாயம் இந்த நாட்டை விட்டு குடி பெயர்வதற்கும் இனக் குடிப்பரம்பலில் சிதைவை ஏற்படுத்துவதற்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டிலும் அராஜகத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்த பயன்படும் இந்தச் சட்டத்தில், எந்த மாற்றங்களும் இதன் அடிப்படை நோக்கத்தை சீர்செய்துவிடப்போவதில்லை. ஆகவே, முற்றாக இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு - என்றுள்ளது. (த-22)

# யாழ். துணைத்தூதராக ஜெயபாஸ்கரன் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சு அவரை நியமித்துள்ளது.

இதுவரை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதராக இருந்த பாலச்சந்திரன், வேறு நாடுகளுக்கான இந்தியத் தூதுவராக பொறுப்பேற்கவுள்ளார் என்று கூறப்பட்டநிலையில், யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர், கண்டியிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் பணியாற்றிவரும் நிலையில் விரைவில் யாழ்ப்பாணத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

# ஜனாதிபதியை சந்தித்த புதிய இராஜதந்திரிகள்

கொழும்பு, ஜூலை 23

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான புதிய தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகர் ஆகியோர், கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேற்று முற்பகல் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

நியூசிலாந்து நாட்டின் உயர்ஸ்தானிகராக மைக்கல் எட்வர்ட் எப்பல்டனும் கியூபா மக்கள் குடியரசின் தூதுவராக அன்ட்ரஸ் மாசெலோ கரிடோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாகவே இதுவரையில் இலங்கை விவகாரங்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு வந்தன.

மனிதாபிமான நடவடிக்கைக்குப் பின்னர், வடக்கு மற்றும் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து, அந்தப்பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிடுவதன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி, தூதுவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். (த)

# நீதிமன்றுக்கு அருகில் கசிப்பு விற்றவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி நீதிமன்றுக்கு அண்மையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 18 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக பொலிஸாரின் கண்ணில் சிக்காது அவர் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட நிலையில், அவரை கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-6)

# கிளிநொச்சியில் பணமோசடி முயற்சி

## உண்மை தெரியவந்ததும் மோ.சைக்கிளை கைவிட்டு தெறித்தோடிய பிரகிருதிகள்

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி பாரதிபுரம், கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், மலையாளபுரம் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குச்சென்ற இருவர், தம்மை 'பிஸ்கட்' நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகளாகத் தெரிவித்து 'தமது முதலாளி விபத்தில் காயமடைந்துள்ளார் என்றுகூறி பணமோசடி செய்யமுற்பட்டமை தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் 15 ஆயிரம் ரூபா அளவில் கேட்டவர்கள் அவ்வளவு தொகை பணம் இல்லை எனக் கூறியதும் 2 ஆயிரம் ரூபா வரை கேட்டுள்ளனர்.

இருவருடைய நடவடிக்கைகளிலும் சந்தேகமடைந்த வர்த்தகர்கள் குறித்த பிஸ்கட் நிறுவனத்தின் கிளிநொச்சி விநியோகஸ்தர்களைத் தொடர்புகொண்டு அவ்வாறு விபத்து இடம்பெறவில்லை என்றும் பணம் வசூலிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் உறுதிப்படுத்திய பின்னர் இருவரையும் மடக்கிப் பிடிக்க முயற்சித்த போதும் இருவரும் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார்சைக்கிள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான மோசடிக்காரர்களிடம் வர்த்தகர்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (த-10)

# நாட்டுக்கு இதுவரை ஒரு கோடியே 21 இலட்சத்து 59 ஆயிரத்து 930 தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூலை 23

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் இதுவரையில் ஒரு கோடியே 21 இலட்சத்து 59 ஆயிரத்து 930 தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கான பெறுமதி 15 ஆயிரத்து 460 மில்லியன் ரூபா என்று ஔடத உற்பத்திகள், விநியோக ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் இதுவரை இலங்கை பெற்றுக்கொண்டுள்ள தடுப்பூசிகள், அதற்காக செலவழிக்கப்பட்டுள்ள நிதித்தொகை குறித்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதத்தில் இலங்கையில் மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆசியாவில் நாமே விரைவாக தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டுள்ளோம் என உறுதியாகக் கூற முடியும்.

இவற்றில் 91 இலட்சம் சைனோபோர்ம் தடுப்பூசிகளும், 15 இலட்சத்து 10 ஆயிரம் மொடேனா தடுப்பூசிகளும், 12 இலட்சத்து 64 ஆயிரம் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளும், ஓர் இலட்சத்து 80 ஆயிரம் ஸ்புட்னிக் தடுப்பூசிகளும், ஓர் இலட்சத்து 80 ஆயிரத்து 830 [illegible] தடுப்பூசிகளும் கிடைக்கப்[illegible] இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள



இதுவரையில் 77.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்துள்ளோம்.

இலங்கை ரூபாவின் பெறுமதியில் பார்த்தால் 15 ஆயிரத்து 460 மில்லியன் ரூபாவாகும். ஆகவே மக்களின் பாதுகாப்புக்காக இப்போது வரையில் 15 பில்லியன் ரூபாவை செலவுசெய்து மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தி வருகின்றது - என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய ரீதியான போராட்டத்துக்கு

# வடக்கு அதிபர், ஆசிரியர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கவும்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**நாடு பூராகவும் அதிபர், ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்துக்கு வடக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் புயல்நேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அரசானது தனது ஆட்சிக் காலத்தில் சில கோட்பாடுகளை முன்வைத்து இருந்தது. அதிலும் 2023 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தை கொண்டு வந்தது. அதேபோல் மாணவர்களின் சீருடை மாற்றத்தைக் கொண்டுவந்தது. அரசின் சகல செயற்பாடுகளும் பல்வேறுபட்ட மாற்றங்களும் இந்த கொரோனா காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டன.

அதேபோல ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவறு என கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கொரோனா காலத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இந்த கொரோனா காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் ஒன்லைன் கல்வி முறையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சில பாடசாலைகளில் ஒன்லைன் கல்வி செயற்படுத்தப்படவில்லை இதனுடைய தாக்கம் எதிர்வரும் 2,3 ஆண்டுகளில் உணரப்படும். இலங்கையில் 14 தொழிற்சங்கங்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்துவரும் நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இந்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (ஐ-26)

# சிகை அலங்கரிப்பாளர்கள் உள்ளிட்ட 10 பேருக்கு கொவிட்

வவுனியா, ஜூலை 23



வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் உள்ள சிகையலங்கார நிலையத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில், காத்தார் சின்னக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பேருக்கும், கோமரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும் என 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோரும் தனிமைப்படுத்தப்படவுள்ளனர். (ஐ-18)

# ஷிசாலினியின் இறப்பு விவகாரம்: நீதியான விசாரணை அவசியம்

## த.தே. ம.முன்னணி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 23

ஷிசாலினியின் இறப்புத் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டயகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியின் இறப்பு தொடர்பிலும், பொலிஸாரின் விசாரணைப்போக்கு தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் குறித்த சிறுமி வேலைசெய்து வந்துள்ள நிலையிலேயே சிறுமியின் இறப்பு நிகழ்ந்துள்ளது. குறித்த சிறுமி பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிறுமியின் இறப்பு தற்கொலை என்னும் கோணத்தில் விசாரணையை பொலிஸ் தரப்பு மூடிமறைக்க முயல்கின்றது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த வருடத்தில் 3 ஆயிரத்து 500 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று சிறுவர் ்பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

எனவே, சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது தொடர்பாக, எந்தவொரு அரசும் பொறுப்புடன் செயற்பட்டிருக்கவில்லை என்பதையே இத்தகைய புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. குடும்பங்களில் நிலவும் வறுமை காரணமாக கல்வியைத் தொடரவேண்டிய சிறுவர்கள், சிறுவர் தொழிலாளிகளாக்கப்பட்டு துன்புறுத்தப் படுகின்றனர்.

16 வயது வரை கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் இலங்கையில், சிறுவர்கள் கல்வியைத் தொடரமுடியாத அளவுக்கான பொருளாதார நெருக்கடிகளை இந்த அரசே ஏற்படுத்துகின்றது.

குறித்த சிறுமியின் இறப்பு மற்றும் நடைபெற்றிருந்த பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விசாரணைகள், எவ்வித பக்கச் சார்போ, தலையீடுகளோ இன்றி நேர்மையாக நடைபெற வேண்டும். எவ்வாறாயினும் குற்றவாளிகள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும். இதுவே ஈடுசெய்ய முடியாத சிறுமியின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்குக் கிடைக்கக்கூடிய மிகக் குறைந்த ஆறுதலாகவாவது அமையும் - என்றுள்ளது. (ஒ.4)

# பௌர்ணமி தின கலந்துரையாடல்

நெல்லியடி, ஜூலை 23

நெல்லியடி சதுரங்க சமூகத்தின் பௌர்ணமி தின கலந்துரையாடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பீச் ஹொட்டல் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி திருமதி வைஷ்ணவி சண்முகநாதன் தலைமையில் "இலங்கையினுடைய தனியார் சட்டங்கள்" (தேசவழமை சட்டம்) பற்றிய கலந்துரையாடல் நடை பெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம் உள்ளதால் பங்குபெற்ற விரும்புபவர்கள் 0765433508 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வருகையை உறுதிசெய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# கரந்தாய் மாசார் வீதி சீரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 23

நீண்ட காலமாக சேதமடைந்து காணப்பட்ட கரந்தாய் - மாசார் இணைப்பு வீதியின் சீரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் ரூபா 4.5 மில்லியன் செலவில் குறித்த வீதி தார் வீதியாக சீரமைக்கப்பட்டு வருகிறது.

குறித்த வீதியின் சீரமைப்பு பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் கஜன் முத்துக்குமார், உறுப்பினர்களான ரமேஷ், அருள்செல்வி மற்றும் அமைப்பாளர் வித்தி ஆகியோர் நேரடியாகச் சென்று அண்மையில் பார்வையிட்டனர். (ஐ-13)

# சைனோஃபோர்மின் செயற்றிறனை ஆராய்ந்தமைக்கு சீனா பாராட்டு

கொழும்பு, ஜூலை 23

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் செயற்றிறன் தொடர்பில் சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக்கு சீனா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

சீனாவால் உற்பத்திசெய்யப்படும் சைனோஃபோர்ம் தடுப் பூசியைப் பெற்றுக்கொண்டவர்களில் 95 வீதமானோருக்கு டெல்டா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறக்கூடிய வாறான நோயெதிர்ப்பு சக்தி விருத்தியடைவது சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

திரிபடைந்த டெல்டா வைரஸ்க்கு எதிரான நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்கக்கூடிய வகையிலான சைனோஃபோர்ம் தடுப்பூசியின் செயற்றிறன் தொடர்பில் உலகிலேயே முதலாவதாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் வெளியாகியிருப்பதுடன், அவை மிகவும் வரவேற்கத்தக்கவையாக உள்ளன.

தற்போதைய சூழ்நிலைக்கு மிகவும் அவசியமானதும் பொருத்தமானதுமான இந்த ஆய்வை முன்னெடுத்த பேராசிரியர் நீலிகா மலவிகே மற்றும் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர ஆகியோருக்கு எமது நன்றியை வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

இந்த ஆய்வுகளின் பிரகாரம், சைனோஃபோர்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் 95 வீதமானோருக்கு நோயெதிர்ப்பு சக்தி உருவாவது கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயெதிர்ப்பு சக்தியானது கொரோனா வைரஸின் திரிபுகளான டெல்டா மற்றும் பீட்டா ஆகியவற்றுக்கு எதிரான செயற்றிறனைக் கொண்டிருக்கின்றன - என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஷிசாலினியின் இறப்பால் வெளிவரும் பல மர்மங்கள்

## மனித உரிமைகள் அமைப்பு தகவல்

கொழும்பு,ஜூலை 23

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமி ஷிசாலினி தொடர்பில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் ஐக்கிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பிரனீத்தா வர்ணகுலசூரிய தெரிவிக்கையில்,

சிறுமி ஷிசாலினி டயகம பிரதேசத்தைச் சேர்ந்த தரகர் ஊடாகவே ரிஷாத்தின் இல்லத்துக்குச் சென்றுள்ளார். இதற்காக அவருக்கு 5 ஆயிரம் ரூபா தரகுப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் எப்போது வேலைக்குச் சென்றார் என்பதை தாயாரால் குறிப்பாகச் சொல்ல முடியவில்லை. எனினும், தரகர் பொன்னையா 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பணிப்பெண்ணாக சிறுமி சென்றார் என்று கூறியுள்ளார்.

சிறுமியின் தாயாருக்கு இரண்டு லட்சம் ரூபா பொன்னையா ஊடாக வழங்கப்பட்டுள்ளது. ரிஷாத் வீட்டில் ஷிசாலினிக்கு அறையெதுவும் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை. ரிஷாத்தின் வீட்டு வளாகத்தில் ஒதுக்குப் புறமாக இருந்த பழைய அறையில் அவர் தங்கவைக்கப்பட்டார். அதில் இரும்பிலான கட்டில் மட்டுமே இருந்தது. அவரது தாயார் 4 தடவைகள் அங்கு சென்றுள்ளார்.

அண்மையில் ஷிசாலினி தாயாருடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். ரிஷாத் வீட்டின் ஆண் பணியாளரின் தொலைபேசி ஊடாக பொன்னையாவுக்கு அழைப்பேற்படுத்திய சந்தர்ப்பத்தில் உரையாடியுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தன்னை தும்புத்தடியால் அடிக்கின்றனர் என்று ஷிசாலினி முறையிட்டுள்ளார். அது குறித்து தாயார், ரிஷாத் பதியுதீனின் மனைவியிடம் கேட்டுள்ளார். எனினும், அதனை மறுத்த ரிஷாத் மனைவி, வேலைகளை விரைவாக செய்யாத காரணத்தால் தான் திட்டினேன் என்று கூறியுள்ளார்.

மகள் தீ விபத்தில் சிக்கிய பின்னர் தகவலறிந்த தாயார் ரிஷாத் வீட்டுக்கு வந்து, பின்னர் மருத்துவமனைக்குச் சென்றார். மகள் நீண்ட நாளாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளானதை அறியவில்லை என்று தாயார் தெரிவித்துள்ளார்.

தீக்காயமடைந்த நிலையில் வீட்டின் பிரதான கூடத்துக்கு வந்த ஷிசாலினி தண்ணீர் கேட்டுள்ளார். அதன் பின்னர் அங்கிருந்த மீன் தொட்டியில் பாய்ந்துள்ளார் என்று ரிஷாத்தின் இல்லத்திலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுமி மருத்துவமனையில் 12 நாள்கள் சிகிச்சை பெற்றபோதும், பொலிஸார் மரண வாக்குமூலம் பெறவில்லை - என்றார். (ஒ.4)

# ஹிசாலினியின் உயிரிழப்புக்கு நீதிவேண்டி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜூலை 23


முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றி உயிரிழந்த ஹிசாலினிக்கு நீதிவேண்டி வவுனியாவில் ஆர்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா காமினி மகாவித்தியாலத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அந்தவகையில் கொழும்பில் உயிரிழந்த ஹிசாலினி என்ற சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், தீக் காயமடைந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

இது ஒரு பெரிய குற்றமாக காணப்படுவதுடன் குறித்த குற்றத்தை மறைப்பதற்காக சிறுமி எரியூட்டப்பட்டு கொல்லப்பட்டமையை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். சிறுமியின் உயிரிழப்புக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று தொடர்புடைய அதிகாரிக்ளை கோரி நிற்கின்றோம். அதேபோன்று கிளிநொச்சி கல்மடுப் பகுதியில் 6 வயது சிறுமி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் இணையத்தளங்களில் சிறுமிகள் விற்பனை செய்யப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை எமக்கு கவலையளிக்கின்றது. இதனால் நாட்டின் பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது கேள்விக்குறியாகவுள்ளது. எனவே எமது நாட்டின் பெண்கள், சிறுவர்கள் சுய கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழும் சூழ்நிலையை அரசு பெற்றுக்கொடுக்கவேண்டும். ஹிசாளினி போன்ற பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நீதி வழங்கப்படவேண்டும் - என்றனர். (ஐ-110)




## பெண்கள்,சிறுவர்கள் மீதான

# துஷ்பிரயோகத்தை எதிர்த்து மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார்,ஜூலை 23

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்துக்கு நீதிவேண்டி மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட பெண்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்பாட்டக்காரர்கள் கருத்து தெரிவிக்கையில், "தற்போது நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் வேலைசெய்த டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் உயிரிழப்பு, இணையத்தளத்தில் சிறுமி ஒருவர் விற்பனை செய்யப்பட்டு பாலியல் ரீதியாக துன்புறுத்தப்ப ட்டமை மற்றும் கிளிநொச்சி பகுதியில் 6 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்களை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் குறித்த சம்பவங்களுக்கு காரணமாக இருந்த குற்றவாளிகளை விரைவாக அடையாளம் கண்டு அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றனர். (ஐ-213)

# டயகம சிறுமி விவகாரத்தை அரசியல் மயப்படுத்தாதீர்

## ஐ.ம.சக்தி விசனம்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகம சிறுமியின் உயிரிழப்பை, அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமியின் உயிரிழப்பு குறித்து ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. சில தரப்பு இந்தச் சம்பவத்தை அரசியல் மயமாக்க முயற்சிக்கின்றன. ஏனைய சில தரப்புக்கள் இந்த துயரமான சம்பவத்தை இனத் துவேஷமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இரு தரப்பினரின் நோக்கங்களையும் நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவம் குறித்து அரசு நியாயமான விசாரணையை நடத்தி, தாமதமின்றி சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கை மூலம் மட்டுமே வேதனைக்குள்ளான தரப்புக்கு நீதி கிடைக்க முடியும்.

இதுபோன்ற ஒரு செயற்பாட்டில், சமூகத்தில் தவறான தகவல்கள் பரவாமல் தடுக்கவும், சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் இது உதவும் - என்றார். (ஒ.4)

# ஷிசாலினியின் குடும்பத்தினரிடம் 10 மணித்தியாலங்கள் விசாரணை

கொழும்பு,ஜூலை 23

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் இல்லத்தில் பணிபுரிந்த வேளையில் தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த ஷிசாலினியின் குடும்பத்தினரிடம், சுமார் 10 மணித்தியாலங்கள் பொலிஸார் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து டயகமவுக்குச் சென்ற சிறப்புப் பொலிஸ் குழு நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் டயகமவில் அமைந்துள்ள சிறுமியின் இல்லத்துக்குச் சென்று வாக்கு மூலங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

சிறுமியில் தாய், தந்தை, சகோதரர் மற்றும் கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ரிஷாத் பதியூதீனின் இல்லத்துக்கு சிறுமியை பணியமர்த்த நடவடிக்கைகளை முன்னெடுத்த தரகர் ஆகியோரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

சிறப்பு பொலிஸ் குழுவுக்கு மேலதிகமாக, நுவரெலியா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் டயகம பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.4)

## சிறுவர், பெண்கள் மீதான

# துஷ்பிரயோகத்தைக் கண்டித்து முல்லைத்தீவிலும் ஆர்ப்பாட்டம்

சிறுவர் மற்றும், பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த சிறுமியான ஹிசாலினியின் இறப்புக்கு நீதிவேண்டி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


"பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதல், சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல் மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுதல்" போன்றவற்றைக் கண்டிக்கும் வகையிலான பதாகைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.




ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் மரியசுரேஸ் ஈஸ்வரி, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுனப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறந்து போகுமா? மறக்கத்தான் முடியுமா?



# கறுப்பு ஜூலை

நந்தன்

தொட்டாற்சிணுங்கி என்ற ஒரு பூண்டு இருக்கின்றது. அதை ஒருவர் தொட்டால் போதும் உடனே சுருங்கிக்கொண்டுவிடும். இவ்வாறுதான் தமிழர்கள் எதையாவது செய்யமாட்டார்களா அவர்கள் மீது வன்முறைகளைத் தூண்டிவிடுவதற்கு? என்று காத்திருந்த சிங்களப் பேரினவாதிகளுக்கும் குண்டர் கும்பல்களுக்கும் இனவெறியர்களும் 1983ஆம் ஆண்டு அடி மாதம் திருநெல்வேலியில் இடம்பெற்ற சம்பவம் சாட்டாக அமைந்தது. திருநெல்வேலியில் கண்ணிவெடியால் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பொட்டலங்களாக கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டு கனத்தையில் எரிக்கப்பட்டபோது அதனைக் கண்டு திடீர் ஆத்திரம் கொண்டு சிங்களவர்கள்

கனத்தையில் கொண்டுபோய்த்தான் எரிக்க வேண்டுமா? அதற்கெல்லாம் ஒரு பின்னணி இருந்திருக்க வேண்டும். அன்றைய தினமே கொழும்பில் குழப்பம் தொடங்கியது. இரவிரவாக கொழும்புப் பிரதேசம் முழுவதும் இருந்த தமிழர்களின் உடைமைகள் தீக்கியரையாக்கப்பட்டன. சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கலவரத்தினால் தமிழ் மக்கள் அல்லோலகல்லோலத்துக்குள்ளானார்கள். கொலை, கொள்ளை, தீயிடல், சூறையாடல் தொடர்ந்தன. இவ்வளவுக்கும் நாட்டின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டவர்கள் கொழும்பில்தான் இருந்தார்கள். நினைத்திருந்தால் ஒரு சில மணிநேரத்துக்குள் கலவரத்தை அடக்கியிருக்கலாம். செய்தார்களா?

அடுத்தநாள் அதற்கும் அடுத்தநாள் வரைகக்கும்



கிளர்ந்தெழுந்தார்கள் என்று சிங்களத் தலைவர்கள் நியாயம் கற்பிக்க முனைந்தபோதிலும் இப்படியான சம்பவத்துக்காக அவர்கள் காத்துள்ளார்கள் என்பதை பின்னர் நடந்தேறிய வெறியாட்டங்கள் நிரூபித்தன. சிங்கத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்களும் அதைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டின. தமிழர் வீடுகளும் கடைகளும் அச்சொட்டாக இனங்காணப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன; தீக்கிரையாக்கப்பட்டன. வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு தமிழர் வசித்த இடங்களைத் தேடிச் சென்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சிங்களத் தலைவர்கள் அதுவும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அந்நாள்களில் நாட்டில் எவ்வெப் பகுதிகளுக்குச் சென்றார்களோ அங்கெல்லாம் தமிழர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. கொலையுண்டவர்களின் எண்ணிக்கை சரியாக வெளியிடப்படவில்லை.

மலையகத்தில் பல இடங்களில் தமிழ் மக்கள் இவ்வாறுதான் இம்சைக்குள்ளாக்கப்பட்டனர்.

“போர் என்றால் போர், அதையென்றால் அமை, நான் இரண்டுக்கும் தயார் என்று வீரவேசம் பேசிய அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அடிமனதில் தமிழர் தேசிய எழுச்சியை நசுக்கி விடுவதற்காக தீட்டப்பட்டிருந்த திட்டத்தின் ஒரு பகுதியாகவே இவை நிறைவேற்றப்பட்டதாக உரணக் கூடியதாய் இருந்தது. தமிழர்கள், போராட்டங்களில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் ராணுவத்தை கட்டவிழ்த்துவிடுவேன் என்று கூறியிருந்தவர் அல்லவா அவர்? யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற அவ்ரோ விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் குண்டுவெடிப்புக்குள்ளாகி நொருங்கியதையடுத்து யாழ்ப்பாணத்தில் இளைஞர் எழுச்சியைக் குறிப்பிட்ட காலத்தில் நசுக்கிவிட்டுத் திரும்பும்படி தனது மருமகனான ராணுவத் தளபதியை இங்கு அனுப்பியிருந்தார் ஜே.ஆர்.

அந்த வேளையில் எத்தனை இளைஞர்கள் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு வீதிகளிலும் பற்றைக்காடுகளிலும் வீசப்பட்டுக் கிடந்தார்கள்? மறக்க முடியுமா? மறப்பதற்கு நெஞ்சுதான் இடந்தருமா? இளைஞர்களின் எழுச்சியை ஜே.ஆரின் தந்திரத் திட்டங்களால் ஒழிக்க முடியவில்லை. மாறாக போர் முனைப்பும் எதிர் நடவடிக்கைகளுமே மேலோங்கின. அவ்வாறான ஒரு சம்பவமே திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடிகளில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் உடல்களை அவசர அவசரமாக ஏன் கொழும்புக்கு அனுப்பினார்கள்? கொழும்பில் ஒட்டுமொத்தமாக

தீர்க்கமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. நாடுபூராவிலும் சிங்களக் காடையர்கள் தம் இஷ்டப்படி, திட்டமிட்டபடி கொலை, கொள்ளைகளை நடத்திக் கொண்டிருந்தவேளையில் தமிழர் பிரதேசங்க ளில் ஆயுதப் படைகள் அட்டூழியங்களில் இறங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் மட்டும் 70 பேர் கொல்லப்பட்டனர் என அறியவந்தது.

**தஞ்சம் புகுந்த நேரத்திலும் தாக்குதல்**

நாடுமுழுவதிலும் தனித்துப் போன தமிழ் மக்கள் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தார்கள். அந்த இடங்களையும் கூட காடையர்கள் தேடிச் சென்று தாக்குதல் நடத்தியிருந்தார்கள். ஜூலை 25 ஆம் திகதி வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 53 பேரில் 37 தமிழர்கள் காடையர்களாலும் சிங்களக் கைதிகளாலும் அடித்தும் குத்தியும் கொல்லப்பட்டனர். அவர்களில் குட்டிமணி, தங்கத்துரை போன்ற விடுதலை வீரர்களும் அடங்குவர். அத்தோடு முடியவில்லை. பேரினவாதிகளின் தாகம் அடங்கவில்லை. 27ஆம் திகதி எஞ்சியிருந்தவர்களில் 15 பேரும் கொல்லப்பட்டனர். அவர்களின் மேற்பார்வைக்கு அதிகாரிகளும் இருந்தார்கள். சிறைக்கூடத்துக்கு கதவுகளும் பூட்டுகளும் கூட இருந்தன. இந்தப் படுகொலைகள் நடந்தபோது அதிகாரிகள் எல்லோரும் எங்கே போனார்கள்? கொலைவெறி கொண்டு உள்ளே புகுந்தவர்களுக்கு திறப்புகள் எவ்வாறு கிடைத்தன? கதவுகள் திறந்துதான் கிடந்தனவா? இவை போன்ற கேள்விகளுக்கு எப்பொழுதுமே விடை கிடைக்கப்போவதில்லை. ஏன் என்றால் அவை திட்டமிட்டுச் செய்யப்பட்டவை.

என்று மலையகத் தமிழரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதோ அன்றே தமிழர்களின் உரிமைகளைப் படிப்படியாக பறிப்பதற்கான




திட்டம் வகுப்பட்டுவிட்டது என்பதை மூதறிஞர் தந்தை எஸ்.ஜே.வி. மட்டுமே உணர்ந்திருந்தார். அந்தத் திட்டம் அமுலான கையோடு தமிழர் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாறை போன்ற பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மிக சாதுரியமாக அமுலாகின. இவைகளுக்கு எதிராக தமிழர்கள் கிளர்ந்து எழுந்தபோதெல்லாம் அவர்களின் தலைவர்களின் முன் அரை மந்திரி, முழு மந்திரிப் பதவிகள் எலும்புத் துண்டுகளைப் போல வீசப்பட்டன. அதற்கு மேலும் மூச்சுவிட்டால் அரச படைகள் பொலிஸ கொமாண்டோக்கள் மற்றும் காடையர்களின் அடிதடி தர்பார் என்று அவ்வப்போது நடத்தப்பட்டன. 1956, 1958, 1961, 1977, 1981 ஆகிய ஆண்டுகளின் பதிவுகள் இவைகளுக்குச் சான்று சொல்லும் இவைகளுக்கெல்லாம் சிங்கள, பௌத்த தர்ம ராஜ்யத்தின் கொடூர ஆட்சிக்குச் சிகரம் வைத்தாற்போல் 1983ஆம் ஆண்டு கலவரங்கள் அமைந்தன.

இதைத்தான் “சன்டேசில் மண்டேகில்” என்று நையாண்டி செய்திருந்தார் சௌமிய மூர்த்தி தொண்டமான்.

ஆம், அந்தக் கறுப்பு ஜூலை கொடுமை கள் தமிழர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டதாக, தமிழர் எழுச்சியைத் தகர்த்துவிட்டதாக எண்ணிச் சிங்கள ஆட்சியாளர்கள் மனப் பால் குடித்துக்கொண்டிருந்த வேளையில் அந்தக் கலவரங்களில் உயிர்நீத்த செல்வங்களின் தியாகங்கள் வீண்போகாமல் உலகம் முழு வதும் இந்த நாட்டின் பேரினவாதத்தின் அவர்களால் பற்றிக்கொள்ளப்படும் ஜனநாயகத்தின் பொட்டுக்கேட்டை பறைசாற்றி வைத்தன.

தமிழ் இளைஞரின் எழுச்சி ஒழிந்தது என்ற கனவில் மூழ்கிப்போயிருந்த பேரினவாதிகளுக்கு இல்லை இல்லை அது இன்னும் பன்மடங்கு புத்தூக்கம் பெற்றுவிட்டது என்பதை நினைவூட்டுவதாகவும் அமைந்தது.

இந்த நிலைமைபற்றி 90களில் யாழ்ப்பாணத்து பத்திரிகை ஆசிரியர் ஒருவர் எழுது கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். முனைப்போடு தலைநிமிர்ந்தார்கள் தமிழ் இளைஞர்கள், முற்றுப்புள்ளியை அழித்தார்கள், காற்புள்ளியோடு தொடங்கி அரைப்புள்ளியாகி சிங்கள அரசுக்கு கேள்விக் குறியாகி உலகத் துக்கு வியப்புக்குறியாகி... சில நாடுகளில் பிரிவினைப் புரட்சிகளுக்கு இவர்கள் மேற்கோள் குறியும் ஆகிவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்தார் வருடம்தோறும் இந்த கறுப்பு ஜூலை வரும் போதெல்லாம் அன்று உயிர்நீத்த தமிழ் இரத்தத்தின் இரத்தங்களின் நினைவுவரவே செய்யும், தமிழர் தம்மைத் தாமே ஆளும் நிலை வரும் வரை அவர்களுக்கு விமோசனமே இல்லையென்பதை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வேண்டாம் குருதிச் சகதி

**1983** ஆம் ஆண்டு ஜூலை மாதம் இதே நாளில் இலங்கைத் தீவு கொளுந்து விட்டெரிந்தது. கறுப்பு ஜூலை என்று அடையாளப்படுத்தப்பட்டது அந்த நாள். இன்று வரையும் அந்த நாளும் சரி, அதற்கான காரணங்களும் சரி, தமிழர்களின் வாழ்வும் சரி தொடர்ந்தும் இருண்மை சூழ் நிலையிலேயே இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து நாடெங்கிலும் இயல்பாகவே ஒரு பதற்றம் ஏற்பட்டிருந்தது. அதை மேலும் கொழுந்துவிட்டு எரியச் செய்வதைப்போன்று இறந்த சிப்பாய்களுக்கு மிகப்பெரும் எடுப்பில் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. இத்தகையதொரு பின்னணியில்தான் கொழும்பில் உச்சக்கட்ட வேகத்தில் ஆரம்பித்தது இந்த வெறியாட்டம்.

சுமார் ஒரு வாரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்த வெறியாட்டத்தில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். இதன் பின்னர்தான் இலங்கைத் தீவில் தமிழர், சிங்களவர் பிரச்சினைகளும் பிரிவினை வாதங்களும் உச்சவேகம் பெறத் தொடங்கின.

ஆனால், எதற்காக இந்தக் கறுப்பு ஜூலை கலவரங்கள் இடம்பெற்றன என்று எண்ணிப் பார்த்தால் அதற்கான காரணங்கள் இன ஒடுக்குமுறைகளும் அடக்குமுறைகளும்தான். துயரம் என்னவெனில் இப்படியொரு மிகக் கேவலமான குருதிச் சகதி இடம்பெற்ற பின்னரும், எதற்காக அந்தக் குருதிச் சகதி இடம்பெற்றதோ அதற்கான காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதே.

இன்று தமிழர் தேசத்தில் இடம்பெறும் அத்துமீறல்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. கோத்தாபய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாள்களில் தமிழர் தேசத்தில் ஏகப்பட்ட வடிவங்களில் பல்வேறு பிரச்சினைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. புதிது புதிதாக பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் மொழி புறக்கணிப்பு, தனிச் சிங்கள நியமனங்கள், காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலைமை வெளிப்படுத்தப்படாமை என்று எண்ணற்ற பிரச்சினைகளை இன்று தமிழர் தாயகம் தாங்கி நிற்கின்றது.

ஆக, எதற்காக இந்தத் தேசத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இப்படிப்பட்ட விரிசல் விழுந்ததோ அந்த விரிசலை நெருக்கமாக்குவதற்குப் பதிலாக இன்னும் விரிவுபடுத்தி அந்தப் பிரிவினையை தமது வாக்குவங்கியாக்கி தேர்தல்களில் வென்று ஆட்சியதிகாரத்தில் குளிர்காயவே கோத்தாபய தரப்பு கங்கணம் கட்டி நிற்கின்றது.

வரலாறு ஒரு பெரும் கற்பிதத்தை எமக்குத் தந்திருக்கின்றது. அதை ஆராய்ந்து அந்த 'இழி நாளுக்கு' என்ன காரணமோ அதைத் தீர்த்து சகோதர மனப்பான்மையையும் இனப்பன்மைத்துவத்தையும் கட்டியெழுப்புவதுதான் ஓர் அரசின் உன்னதமான பணியாக இருக்க முடியும். ஆனால், என்ன காரணத்துக்காக கறுப்பு ஜூலை இடம்பெற்றதோ, அதை ஊதிப்பெருப்பிப்பதைத்தான் இன்றைய அரசு செய்து கொண்டிருக்கின்றது. இது ஒரு வாரலாற்றுத் தவறு. இதன் தாற்பரியத்தை எதிர்வரும் காலத்தில் 'கோத்தாபய அன்ட் கோ' அனுபவிக்க வேண்டிவரலாம்.



# வெளிநாட்டு நாடகங்களின் ஒளிபரப்பால் 251 மில்லியன் ரூபா அரசுக்கு வருமானம்

**கொழும்பு, ஜூலை 23**



**வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் இந்நாட்டு ஊடகங்களில் ஒளிபரப்பப்பட்டமையால் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இதுவரை கிடைத்துள்ள வருமானம் 251 மில்லியன் ரூபாவாகும் என்று வெகுசன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.**

வெகுசன ஊடக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

கொவிட் சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களை இலங்கை ஊடகங்களில் ஒளிபரப்புவதற்கான வரி அறவீடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக மேற்படி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு அறவிடப்படும் வரித் தொகையை மேலும் அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும், இதன் ஊடாக உள்நாட்டின் கலாசாரம் மற்றும் தேசிய தொலைக்காட்சிக் கலை மற்றும் இத்தொழில்துறையை பாதுகாத்து, இந்நாட்டுக் கலைஞர்களைப் பலப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மாணவர்களின் கல்வி நிகழ்ச்சிகளை 16 மணித்தியாலங்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதற்காக செலவிடப்படும் தொகை 22 மில்லியன் ரூபாவாக இருக்கின்றபோதும், 4 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்ட அமைச்சர், பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக அரச தொலைக்காட்சி சேவைகள் தமது பொறுப்பை நிறைவேற்றும் எனவும் தெரிவித்தார்.

இதுவரை தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சி சேவை இழப்பைச் சந்திக்கும் நிறுவனமாக மாறியுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல்ல, தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து, புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையை முன்னேற்றுவதன் ஊடாக, இந்த வருட இறுதியில் இதனை வருமானம் ஈட்டும் மட்டத்துக்குக் கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம் என்று கூறினார்.

தொலைக்காட்சி சேவைகளுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் தற்பொழுது இயங்கிவரும் செய்தி இணையத்தளங்களைப் பதிவுசெய்யும் செயல்முறைகளை ஒழுங்குபடுத்தல், பத்திரிகை கவுன்சில் சட்டத்தை சகல ஊடகங்களுக்கும் ஏற்புடைய விதத்தில் ஊடகக் கவுன்சில் சட்டமாக மறு சீரமைத்தல் ஆகியவற்றில் தமது அமைச்சு கவனம் செலுத்தி உள்ளது எனவும் - கூறினார். (ஒ,5)

# திருமண நிகழ்வுக்கு தடை ஆலோசிக்கின்றது அரசு

கொழும்பு, ஜூலை 23

திருமண நிகழ்வுகளை சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி நடத்த வேண்டும் என்று அரசு விடுத்துள்ள வேண்டுகோள் பலனளிக்காத நிலையில், திருமண நிகழ்வுகள் நடத்தப்படுவதை தற்காலிகமாக நிறுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

150 பேருடன் திருமண நிகழ்வுகளை நடத்த அரசு அனுமதித்திருந்தாலும், கடந்த சில நாள்களாக பல்வேறு இடங்களில் நடந்த திருமண நிகழ்வுகளில் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர் என்று பாதுகாப்புத்துறையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக என்று சொல்லப்படுகிறது.

அத்துடன் திருமணத்தையொட்டிய வரவேற்பு நிகழ்வுகளும் தடல்புடலாக பல மண்டபங்களில் நடந்துள்ளதால் திருமண கொத்தணி உருவாகும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது என சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அதனால் திருமண நிகழ்வுகள் நடத்தப்படுவதை தற்காலிகமாக நிறுத்துவது குறித்து ஆராயப்படுகிறது. நாளை வெள்ளிக்கிழமை இது தொடர்பில் விசேட அறிவிப்பு வெளிவரும் என்று அறியமுடிகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணத் தேர்தலை விரைவுபடுத்த திட்டம்

கொழும்பு,ஜூலை 23
மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள முரண்பாடு களுக்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்மானம் எடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட் டுள்ளன. தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தங்களின் யோசனைகளை முன்வைத்துள்ளனர். புதிய அரசமைப்பின் ஊடாக தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும். என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நிறைவு பெற்றதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்தோம். தேர்தல் முறைமை மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் உள்ளிட்ட இரு பிரதான காரணிகள் தடையாக இருந்தன. பழைய தேர்தல் முறைமையின் பிரகாரம் மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். பிற்பட்ட காலத்தில் புதிய தேர்தல் முறைமை குறித்து அவதானம் செலுத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக் குழு ஆலோசனை வழங்கியது. இருப்பினும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தேர்தலை நடத்தும் தீர்மானம் தொடர்ந்து தாமதமாகியுள்ளது.என்றார். (ஒ,4)

# சஜித் தரப்பின் பிரேரணையால் அரசுக்கு பெரும்பான்மை பலம்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 23
அரசுக்கு வெவ்வேறு கருத்து முரண்பாடுகளுடன் காணப்பட்டவர்களை ஒன்றிணைந்து, மீண்டும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசுக்குப் பெற்றுக் கொடுக்க சஜித் பிரேமதாசவினுடைய தரப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார். நம்பிக்கையில்லா பிரேரணை நாடகம் நிறைவடைந்துள்ளது. நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கான பிரதான காரணியாக அமைந்த எரிபொருள் விலையேற்றத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

10ஆம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு 18 02 1943
இறப்பு 23 07 2011

கர்த்தருக்குள் நித்திரையடைந்த
அருளப்பு அமலதாஸ்


ஆண்டுகள் பத்தாகி விட்டதப்பா
எங்களை விட்டு நீங்கள் பிரிந்து சென்று விட்டீர்களப்பா
ஆயிரம் உறவுகள் நமக்கு ஆறுதல் சொன்னாலுமப்பா
உங்கள் அன்புக்கு ஈடாகுமோ அப்பா
எமக்கு அருகில் நீங்கள் இல்லாதபோதும் அப்பா
உங்களை நினைத்துக் கொண்டு இருக்கும் அளவிற்கு
உங்கள் நினைவுகளை தந்து சென்று விட்டீர்கள் அப்பா
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகளுடன்
பரிதவித்து நிற்கின்றோம் அப்பா.

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

# திரிபு வைரஸ்க்கள் பரவலடைய வாய்ப்பு

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு,ஜூலை 23**
**நாட்டில் பல்வேறு புதிய திரிபுடைய வைரஸ்க்கள் இனங் காணப்பட்டுள்ள நிலையில், அவை பரவலடையும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் 20 வீதமானோர் ஒட்சிசன் தேவையுடையோராகக் காணப்படுகின்றனர்.

எனவே தற்போதைய ஆபத்தை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் . கொரோனாத் தொற்றால் சுகாதாரக் கட்டமைப்பு பாதிப்படையாமல் தவிர்ப்பதற்கு வீடுகளில் சிகிச்சையளிக்கும் முறைமையை சகல மாவட்டங்களிலும் விரிவுபடுத்த வேண்டும். வைரஸ்க்கள் பரவுகின்ற போதும், சுகாதார அமைச்சால் பி.சி. ஆர். பரிசோதனைகளின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தொற்றாளர்கள் இனங்காணப்படும் வீதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. வைரஸ் பரவலால் ஏற்படக்கூடிய ஆபத்து குறைவடையவில்லை. எனவே அதிகரித்துச் செல்லும் அபாயத்தை உணர்ந்து மக்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்- என்றார். (ஒ,4)

# பிணைமுறி மோசடி வழக்கு மீண்டும் விசாரணைக்கு

கொழும்பு,ஜூலை 23
இலங்கை மத்திய வங்கியின், பிணைமுறி மோசடி வழக்கை தொடர்ச்சியாக விசாரணை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த முடிவை அறிவித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த அர்ஜுன மகேந்திரன் பிணைமுறி மோசடி விவகார வழக்கில் பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எனினும் அவர் கடந்த 4 வருடங்களாகத் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்த விசாரணை கொழும்பு மேல்நீதிமன்றில் நடைபெற்றது.

பிணை முறி வழங்கல் செயற்பாட்டில் முறைப்படி அனுகுமுறைகள் பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டால், இலங்கை மத்திய வங்கிக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது என்று தொடரப்பட்ட வழக்கில், அர்ஜுன மகேந்திரன் மற்றும் அவரது உறவினரான பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட குழுவினர் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டு பிணை வழங்கப்பட்டபோதிலும், இதுவரை அர்ஜுன மகேந்திரன் தலைமறைவாகியுள்ளார். இந்த நிலையில் அவர் இல்லாமலேயே மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதியை கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது. (ஒ,4)

# அரசின் பலத்துக்காகவே பிரேரணைக்கு எதிர்ப்பு

## பெரமுன தெரிவிப்பு

அரசு பலவீனமடையக்கூடாது என்பதற்காகவே வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தோம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் விலையேற்றம் குறித்து உதய கம்மன்பிலவுக்கு எதிராக கட்சி என்ற ரீதியில் முன்வைத்த குற்றச்சாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது. வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஊடாக அரசைப் பலவீனப்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சித்தனர். அவர்களின் நோக்கம் நிறைவேறவில்லை. அரசு பலவீனமடையக்கூடாது என்பதற்காகவே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தோம்- என்றார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பிரதேச செயலகத்தை உடன் இரு பகுதிகளாகப் பிரியுங்கள்

## சிரமங்களைத் தவிக்கலாம் என்று மக்கள் வலியுறுத்து

தென்மராட்சி ஜூலை 23

**தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கும் செயற்பாடு கிடப்பில் உள்ளதால் பிரதேச பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்;

தென்மராட்சி பிரதேச செயலகம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளது என்று கடந்த 10 வருடங்களாக அறிவிப்புகள் வருகின்ற நிலையில் இன்று வரை அது சாத்தியப்படவில்லை. பிரதேசத்தில் தற்போது காணப்படும் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு பிரதேசம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தால் வீட்டுத்திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் சிரமங்களை எதிர்நோக்கும் அவசியம் இல்லாமல் போயிருக்கும். நாட்டில் அதிகூடிய கிராம அலுவலர்களைக் கொண்ட தென்மராட்சி பிரதேச செயலகத்தை தென்மராட்சி, கொடிகாமம் என இரு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்திலும் அங்கீகரிக்கப்பட்டது.

60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சி பிரிவில் 32 கிராம அலுவலர் பிரிவுகளும் கொடிகாமம் பிரிவில் 28 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்வாங்கப்பட்டிருந் தன.

பிரதேச மக்களும் இதனை எதிர்பார்த்து பத்து வருடங்களாக காத்திருக்கின்றனர். விசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் பிரிவுகள் தொடர்பான விவரங்கள் வெளியாகுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று வரை அது தொடர்பான எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

பிரதேசத்தில் சுமார் 4 ஆயிரம் பேர் நிரந்தர வீடுகள் இல்லாமல் வசிக்கின்றார்கள். வருடத்தில் 300க்கு குறைந்த வீடுகளே மாவட்ட செயலகத்தால் வழங்கப்படுகின்றன.

வருடாந்தம் வீடு தேவைப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது. இந்த நிலை நீடிக்குமாயின் சிலர் இன்னும் 20 வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

நிரந்தர வீட்டுத் திட்டம் மற்றும் மலகூடம் வசதி தேவையானோர் பெரும்பாலும் கொடிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். பிரதேசம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படின் இரு பிரிவிலும் பெருமளவானோருக்கு வீட்டுத்திட்டங்கள் மூலம் வீடுகளைப் பெற முடியும். அவர்களின் தேவைகளும் குறையும். எனவே இதனால் நீண்ட காலமாக கிடப்பில் காணப்படும் பிரதேச செயலகத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கும் செயற்றிட்டத்தை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும்-என்றனர். (ப-9)

## மன்னார் மாவட்டத்தின் முதல் பெண் விமானிக்கு செல்வம் எம்.பி. வாழ்த்து

மன்னார்,ஜூலை 23

மன்னார் மாவட்டத்தின் முதலாவது பெண் விமானியாக முதல்கட்ட பயிற்சியை நிறைவுசெய்த இமானுவேல் எவாஞ்ஜலினுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வாழ்த்து தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

மன்னார் மாவட்டத்தின் வட்டக்கண்டல் காத்தாக்குளம் கிராமத்தில் பிரான்சிஸ் இமானுவேல் தாசிலம்மா தம்பதியரின் மகள் இம்மானுவேல் எவாஞ்சலின், பெண் விமானியாக தனது முதல்கட்ட பயிற்சிகளை நிறைவு செய்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவரை வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்- என்றுள்ளது. (ஐ-213)



## 40 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள்

வேலணை,ஜூலை 23

வேலணை பிரதேசத்தின் சரவணை கிராமத்தில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. கனடாவில் வசிக்கும் பேராசிரியர் பால.சிவகடாட்சம் குடும்பத்தினரது நிதிப் பங்களிப்பில், பேராசிரியர் குகபாலனின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## மாட்டுடன் மோதி குடும்பஸ்தர் காயம்

சாவகச்சேரி,ஜூலை 23

வீதியின் நடுவே நின்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில், அதில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நுணாவில் மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இப் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)

## கல்லுண்டாய் மக்கள் மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

கல்லுண்டாய் பகுதி மக்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக வாயிலை மறித்து மீண்டும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்லுண்டாயில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளைச் சுற்றி மழைக்காலங்களில் வெள்ளம் தேங்குவதால், அந்தப் பகுதியை மண் போட்டு உயர்த்தித் தரும்படி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அவர்களின் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. கடந்த மே மாதமும் இதே கோரிக்கையுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் கொரோனாத் தொற்று நிலைமையைக் காரணம் காட்டி பொலிஸார் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் நேற்று மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பறந்தா செல்வது வீட்டுக்கு என்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (ஓ.4)



## அதிபருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,ஜூலை 23

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் பங்குபற்றியுள்ளார். அதில் சுமார் 50 பேர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அவர் தான் கடமையாற்றும் பாடசாலையில் வகுப்புகளை நடாத்தியுள்ளார். பெற்றோர்களுக்கான கலந்துரையாடலையும் நடாத்தியுள்ளார். உரும்பிராயில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழாவிலும் கலந்துகொண்டுள்ளார்.

இதனையடுத்து இவருடன் தொடர்பில் இருந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் திணைக்களத்தில் கூட்டத்தில் பங்குபற்றிய அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் இதுவரையில் தனிமைப்படுத்தப்படவில்லை. இவர் கடந்த 9ஆம் திகதி முதலாவது கொரோனாத் தடுப்பூசியையும் பெற்றுள்ளார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜூலைப் படுகொலையை நினைவுகூர தடையுத்தரவு

சம்பூர்,ஜூலை 23

**சம்பூர் பொலிஸ் பிரிவில், கறுப்பு ஜூலை படுகொலையை நினைவுகூர தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

சம்பூர் பொலிஸாரால், நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை ஆராய்ந்து, ஒரு குழுவினருக்கு இந்தத் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தலை நடத்த ஒரு தரப்பினர் தயாராகி வருகின்றனர் என்று பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தைப் பரிசீலித்த பின்னர், நீதிவான் பாஸ்மிலா பானு, வெருகல் பிரதேச சபையின் துணைத் தலைவர் தேவநாயகம் சங்கர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் திருகோணமலை மாவட்டச் செயலாளர் கணேசபிள்ளை குகன் உள்ளிட்டோருக்கு தடை உத்தரவு பிறப்பித்து, கட்டளையை வழங்கினார்.

1983ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 23ஆம் திகதி திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, நாட்டில் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதில், நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். காயப்படுத்தப்பட்டனர். தமிழர்களின் கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் சிங்களக் காடையர்களால் எரித்து அழிக்கப்பட்டன. (ஓ.4)

# ஒரே தடவையில் இரு டோஸ்கள்

*மயக்கமடைந்த பெண் மருத்துவமனையில்*



கொழும்பு,ஜூலை 23

மொடர்னா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட சம்பவம் கண்டி, ஒகஸ்டவத்த தடுப்பூசி மையத்தில் நடந்துள்ளது.

வயதான பெண்மணி ஒருவருக்கு முதல் டோஸ் செலுத்தி சிறிது நேரத்தின் பின்னர், இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அவர் மயக்கமடைந்ததால், உடனடியாக ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தடுப்பூசி மையத்தில் தனக்கு இரண்டு முறை தடுப்பூசி செலுத்தப்பட்டது என்று அவர் மருத்துவர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவரது கணவர் பேராதனை பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையான விசாரணை நடத்தப்படும் என்று மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார். (ஓ.4)

# நான்காம் அலை உருவாகலாம்

*சுகாதார அமைச்சு எச்சரிக்கை*



கொழும்பு,ஜூலை 23

சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க மக்கள் செயற்படத் தவறினால், நாட்டில் கொரோனாத் தொற்றின் நான்காவது அலை உருவாகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்று சுகாதார அமைச்சு மீண்டும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் துணைப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்தா ஹேரத் தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும், மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகள் உள்ளிட்ட அத்தியாவசிய நோக்கங்களுக்காக மத்திரமே மக்கள் பயணிக்க வேண்டும். தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு உதவ வேண்டும் - என்றார்.

அதேவேளை தினசரி மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஒரு சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ஓ.4)

# மொடர்னா தொடர்பில் போலியான தகவல்கள்

*பொலிஸில் முறைப்பாடு*



கொழும்பு,ஜூலை 23

மொடர்னா தடுப்பூசி தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளமைக்கு எதிராக, கண்டி பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியால் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கண்டியை அண்மித்த பகுதிகளில் மொடர்னா தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தடுப்பூசி தொடர்பில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இழக்கப்படும் என்பதால் , இது தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு கண்டி பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி தனது முறைப்பாட்டில் வலியுறுத்தியுள்ளார்.

மொடர்னா தடுப்பூசி உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது. அதில் நனோ தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று உண்மைக்கு புறம்பான செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் கண்டி பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக குற்ற விசாரணைப் பிரிவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

# சேதனப்பசளை உற்பத்திக்கு புதிய இயந்திரம் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜூலை 23

சேதனப்பசளை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இலை குழைகளை சிறு சிறு துண்டுகளாக்கும் அக்ரி ஷ்ரெடர் பிபி 1 எனும் புதிய இயந்திரம் இராணுவத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 4 ஆவது மின் மற்றும் இயந்திரப் பொறியாளர்கள் படையணி மற்றும் 5 ஆவது பொறியியலாளர் சேவை படையணியின் கூட்டு முயற்சியால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு 3.5 மெற்றிக் தொன் புதர்களை 10 மில்லி மீற்றர் துகள்களாக வெட்டக்கூடிய ஆளுமை கொண்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத்தலைமையகத்தின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் கேணல் பி.டி. எல்.ஏ.சி சிறிசேனா இதனை வடிவமைத்துள்ளார் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ.4)



# அத்தியாவசிய சேவையாக 12 துறைகள் வர்த்தமானியில்

கொழும்பு,ஜூலை 23

அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்ட 12 துறைகள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைவாக, மீண்டும் நீடிக்கப்பட்டு, விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்துக்கு அமைவாக, ஜனாதிபதி செயலாளரால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ரயில் திணைக்களம், போக்குவரத்து சபை உள்ளிட்ட பொதுப் போக்குவரத்துச் சேவைகள், அனைத்து மாவட்டச் செயலாளர் காரியாலயம், பிரதேச செயலாளர் காரியாலயம், கிராம சேவகர் பிரிவு, விவசாய பரிசோதனை உதவி அதிகாரி, இலங்கை மத்திய வங்கி உட்பட சகல அரச வங்கி மற்றும் காப்புறுதி சேவை விவகாரம், உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்படும் திண்மக் கழிவகற்றல் சேவை, லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை மத்திய நிலையம்,உணவு ஆணையாளர் திணைக்களம், மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சகல அரச காரியாலய சேவைகள், தபால் திணைக்கள சேவை, சுகாதார சேவையுடன் தொடர்புடைய சகல சேவைகள் ஆகியவை வர்த்தமானி ஊடாக அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கான சேவைகள் தடையின்றிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துக்காக இந்தத் துறைகள் மற்றும் திணைக்களங்கள் அத்தியாவசிய சேவையாக்கப்பட்டுள்ளன. (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையைத் தடவிக் குட்டுவது ரணிலுக்குப் பழகிவிட்டது

## பொன்சேகா கிண்டல்



**கொழும்பு, ஜுலை 23**
**ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் வரலாற்றில் குழப்பும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். தனது கட்சிக்குள் இருக்கும் நபர்களின் காலை வாருவதும், தலையைத் தடவிக் குட்டுவதுமே அவருக்குப் பழக்கமாகிப் போனது என்று எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீதான நம்பிக்கையில்லா பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எரிபொருள் விலையை அதிகரித்து தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துகின்றோம் என்று அரசு கூறுகின்றது. அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றதா, முடியுமா என்பது எமக்குத் தெரியவில்லை.
எரிபொருள் நெருக்கடி நிலைமைகளை கையாள விலைச் சூத்திரத்தைப் பயன்படுத்தியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.
அதேபோன்று வலுச்சக்தி அமைச்சர் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார். பின்னர் அழகான சிரிப்பால் அவற்றை மூடி மறைக்க முயற்சிக்கின்றார். இதனை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.
எரிபொருள் களஞ்சிய குதங்களை இந்தியா எமக்கு வழங்க தயாராக இருந்த நிலையில் அதனை அரசு பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதேபோன்று உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்த நிலையில் அதனையும் சரியாக பயன்படுத்திக்கொள்ளவில்லை.
தேசிய வளங்களை விற்பனைசெய்ய மாட்டோம் என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று எரிபொருள் நிலையங்களையும், சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான பல நெருக்கடி நிலைகளுக்கு மத்தியில் நாம் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவந்தோம்.
இந்த நிலையில் அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக மட்டுமல்லாது முழு அரசுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வர வேண்டும் என்று ரணில் கூறுகின்றார்.
ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு வக்காலத்து வாங்குகின்றார். அவருக்கு வேண்டுமானால் தனியாக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவந்து அவருக்குத் தேவையான திருத்தங்களை உள்வாங்கிக் கொண்டு செயற்படலாம். ஆனால் எமது கட்சியின் பயணத்தைத் தடுக்க எமது காலை வாரவேண்டம்- என்றார். (ஒ.4)

# இராணுவ ஆட்சியை நோக்கியே இலங்கை

## தடுத்து நிறுத்துமாறு சோசலிசக் கட்சி வலியுறுத்து

கொழும்பு,ஜுலை 23
மியன்மாரைப் போன்று இலங்கையும் இராணுவ ஆட்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு எதிராக சகலரும் இன, மத, கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்.
இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.
கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகச் சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முன்னிலை சோசலிசக் கட்சியினர், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் துமிந்த நாகமுவ தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு, எம் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.
ஆனால் எவரும் அறியாத வகையில் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
வைரஸ் பரவலைப் பயன்படுத்தி அரசு நாட்டை இராணுவ மயப்படுத்த முயற்சிக்கின்றது.
அரசு அதன் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்குமாயின், அதற்கு எதிராக எமது போராட்டங்களும் தொடரும்.
கல்வியை விற்பதற்காகவே கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பார்களாயின் கடந்த அரசுக்கு என்ன நடந்தது என்பதை நினைவில் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (ஒ.4)

# சு.கவுடனான சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜுலை 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை இடம்பெறவிருந்த கலந்துரையாடல் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற முரண்பாடுகளைக் களைவதற்காக, இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடுசெய்யப்பட்டது. எனினும் கலந்துரையாடல் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ.4)



# தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 50 பேர் தனிமையில்

சாவகச்சேரி,ஜுலை 23
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர்கள் 50 பேர் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
பிரதேச செயலக திட்டமிடல் அலகில் கடமையாற்றும் மூவர் மற்றும் வெளிக்கள பெண் அலுவலர் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.
அத்துடன் 26 அலுவலர்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களுடன் நேரடித் தொடர்பாளர்களாக அடையாளம் காணப்பட்ட மேலும் 24 பேருமாக 50 அலுவலர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டனர். (ஐ-9)

# முதலீட்டாளர்களுக்கு நிதியமைச்சு அழைப்பு

கொழும்பு,ஜுலை 23
அடிப்படையற்ற அறிவிப்புக்களைக் கருத்தில்கொள்ளாமல் எந்தவொரு விடயம் தொடர்பிலும், நாட்டின் கொள்கை வகுப்பாளர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வருமாறு முதலீட்டாளர்களுக்கு நிதியமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.
நிதியமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
எதிர்வரும் ஜுலை மாதம் முடிவடையும் சர்வதேச பிணைமுறிகள் உள்ளடங்கலாக இலங்கையானது அதன் முதிர்ச்சியடைந்த (காலஅவகாசம் பூர்த்தியடைந்த) கடன்களை மீளச்செலுத்துவதற்கு அவசியமான நிதியைத் திரட்டிவரும் சூழ்நிலையில், மூடியின் முதலீட்டாளர் சேவையால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு அதிர்ச்சியளிக்கின்றது.
இலங்கைக்கான நீண்டகால நாணய வழங்குநர்கள் மற்றும் முதிர்ந்த பாதுகாப்பற்ற கடன்கள் என்பவை மூடியின் முதலீட்டாளர் சேவையால் 'தரமிறங்குவதற்கான மதிப்பாய்வில்' வைக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் அவை தரமிறங்குவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. எது எவ்வாறெனினும். மூடியின் முதலீட்டாளர் சேவையால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிவிப்பானது, இலங்கையின் சர்வதேச பிணைமுறிகள் உள்ளடங்களாகப் பல்வேறு முதலீட்டு வாய்ப்புக்களில் நம்பிக்கை கொண்டிருக்கும் முதலீட்டாளர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவிக்கக்கூடும்.
எதிர்வரும் ஜுலை மாதம் இறுதியில் முடிவடையும் சர்வதேச பிணைமுறிகளுக்கு மீளச்செலுத்துவதற்கு அவசியமான ஆயிரம் மில்லியன் டொலரை இலங்கை அரசு தயார்ப்படுத்தியிருக்கின்றது.
அதேவேளை மீளச்செலுத்தவேண்டிய கொடுப்பனவுகள் அனைத்தும் தயார்நிலையில் இருக்கும்போது மூடியின் முதலீட்டாளர் சேவையால் இவ்வாறான அறிவிப்பு வெளியிடப்படுவது இது முதல் முறையும் அல்ல.
2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி முதிர்ச்சியடைந்த சர்வதேச பிணைமுறிகளுக்கான கொடுப்பனவை இலங்கை அரசு வெற்றிகரமாக மீளச்செலுத்தியமைக்கு முன்னரான செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்றும் மூடியின் முதலீட்டாளர் சேவையால் இவ்வாறான6 ாரு அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.
இவ்வருடத்தின் முதற்காலாண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியானது 4.3 சதவீதமாகப் பதிவானதுடன், அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மிகவிரைவாக மீட்சியடைவதற்கான குறிகாட்டிகளும் வலுவாகத் தென்பட்டன. பொருளாதாரத்தின் மீளெழுச்சிக்கு சமாந்தரமாக அரசின் வருமானங்கள் மற்றும் செலவினங்களை சமநிலையில் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறானதொரு சூழ்நிலையில் மூடியின் முதலீட்டாளர் சேவையால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பானது, தரப்படுத்தல் முகவர் நிறுவனங்களுடன் இலங்கை அரசு பேணிவரும் தொடர்பை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய தன் அவசியத்தை உணர்த்தியுள்ளது- என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்த்த விஷயத்தில் தாமதம் ஏற்படலாம். உடல்நிலை சீர்படும். பணிகளில் உற்சாமுடன் ஈடுபடுவீர்கள். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். பண விஷயத்தில் கவனம் தேவை.

**இடபம்:** வெளியாட்களை நம்பாதீர்கள். உணவு விஷயத்தில் கவனம் தேவை. திருமணம் பற்றிய பயம் வேண்டாம். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினை தீரும். புகழ் மேலோங்கும்.

**மிதுனம்:** பொழுது போக்குகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். சுகமான நாள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தில் அமைதி நிலவும். உழைப்புக்கேற்ற நற்பலன் கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். வருமானம் சீராக இருக்கும். எதிர்பார்த்த ஒரு விஷயத்தில் நினைத்ததை விடச் செலவு குறையும். புத்திசாலித்தனமான செயல்களால் மற்றவர்களைக் க்வர்வீர்கள்

**சிம்மம்:** அழகுணர்ச்சி அதிகரிக்கும். பேச்சில் புத்திசாலித்தனம் வெளிப்படும். விறுவிறுப்பான நாள். ஆதாயம் கிடைக்கும். வீண்பயம் அகலும். நண்பர்களின் மூலம் சந்தோஷ செய்தி வரும்.

**கன்னி:** மற்றவர்களால் முடியாத விஷயத்தையும் செய்து முடிப்பீர்கள். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த நன்மை தாமதமாக நடக்கும். வீடு கட்டுவதில் வாங்குவதில் இருந்த தடங்கல் மறையும்.

**துலாம்:** சொத்து சேர வாய்ப்புண்டு. நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அடுத்தவரின் மனநிலையை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவீர்கள்.

**விருச்சிகம்:** கற்பனை பயத்தைக் கைவிட்டு முக்கிய முடிவெடுக்கும் நாள். முன்யோசனையுடன் நடந்துகொள்வது நல்லது. உங்களை எதிரியாக நினைத்தவர்களை முறியடித்து முன்னேறுவீர்கள்.

**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். விருப்பம் ஒன்று நிறைவேறும். மனதில் நிம்மதி நிலவும். பொருளாதார நெருக்கடி குறையும். மன நிறைவான நாள்.

**மகரம்:** குடும்பத்தில் கலகலப்பு உருவாகும். நிம்மதி நீடிக்கும். சங்கடம் தீர்ந்து நிம்மதி காண்பீர்கள். கடன் தொல்லை அகலும். முயற்சிக்கான பலன் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் போகலாம். பணியில் அலட்சியம் வேண்டாம். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

**மீனம்:** மற்றவர் குற்றத்தை மன்னித்துப் பெருந்தன்மையுடன் நடப்பீர்கள். தடைப்பட்ட நல்ல விஷயம் மீண்டும் தொடரும். அமைதியான நாள்.



# சுந்தரா டிராவல்ஸ் 2 விரைவில்

'சுந்தரா டிராவல்ஸ்' படத்தின் 2ஆம் பாகம் உருவாகவுள்ளது. இதற்கான பேச்சு நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முரளி, ராதா, வடிவேலு உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'சுந்தரா டிராவல்ஸ்'. அசோகன் இயக்கத்தில், தங்கராஜ் தயாரிப்பில் வெளியான இந்தப் படம் போதிய வரவேற்பைப் பெறவில்லை. ஆனால், இந்தப் படத்தின் காமெடிக் காட்சிகள் அனைத்துமே இப்போதும் கொண்டாடப்பட்டு வருகின்றன. தற்போது 'சுந்தரா டிராவல்ஸ்' படத்தின் 2ம் பாகம் உருவாகவுள்ளது.

முரளி, வடிவேலு கதாபாத்திரங்களில் கருணாகரன், யோகி பாபுவை நடிக்கவைக்கப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.



twitter.com/manipmp

சுகர் இருப்பவர்களுக்கு வந்த காயம்கூட ஆறிடும். ஆனா இந்தக் கவிதை எழுதுவோர்க்கு ஏற்படும் காயம் மட்டும் ஆறவே ஆறாதுபோல!

twitter.com/prabhu65290

எதார்த்த மனிதர்கள் செல்லுமிடமெல்லாம் அன்பை விதைத்துவிட்டுச் செல்கிறார்கள்.


twitter.com/Kozhiyaar

உலகத்தில் உள்ள எல்லாரும் Mask போட்டு சப்பை மூக்கு ஆகணும்னுதான் சீனாக்காரன் இந்த வைரஸையே வெளியே விட்டிருப்பான் போல!!

twitter.com/kumarfaculty

குழந்தைகளின் முதல் வாகனம் அப்பா...!




# ஒருவிதமான மேக்கப்



ஒப்பனை கலைஞர் மிமி சோய் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 1.5 மில்லியன் ஃபாலாவேர்ஸ்களை கொண்டுள்ளார்.

இவர் தற்போது வரை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 4,636 பதிவுகளை போஸ்ட் செய்துள்ளார். இதில் ஒவ்வொரு பதிவும் தனித்துவமானதாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இவரது வீடியோக்கள் பலரின் கவனம் பெற்று இன்ஸ்டாகிராமில் அதிகம் பார்க்கப்பட்டு வருகின்றது.

இவர் தற்போது தனது இன்ஸ்டாவில் வெளியிட்டுள்ள காணொலி தற்போது 109,336 லைக்ஸ்களை பெற்றுள்ளன.

முக்த்தில் பல கண்கள், மூக்கு, காது இருப்பது போல இவர் பதிவிட்டுள்ள இந்தக் காணொலி பலரின் கவனம் பெற்றுள்ளது.

இதில் முகத்தில் உதட்டுக்கு சாயம் பூசுவது போல் மிமி சோய் வெளியிட்டுள்ளார். ஆனால் அவர் உதட்டுசாயம் பூசுவது அவர் கண்களுக்கு. சற்று நேரத்தில் கண்களை திறந்தவுடன் உதடு போல் மேக் போட்டுள்ளதை காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## மலர்தேவி அருணாசலம்

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

அன்னை மடியில் 11.06.1953 — ஆண்டவன் அடியில் 03.08.2020

திதி: 23.07.2021

இத்தனை வருட வாழ்க்கை - கற்றுக்கொடுக்காததை
உங்கள் "மரணம்" என்ற ஒற்றை வார்த்தை
கற்றுக் கொடுத்தது - அம்மா

எத்தனை பேர் உலகில் இருந்தும்
யாருமே இல்லாத ஓர் வெறுமையை உணர்த்தியது
உங்கள் மரணம் - அம்மா

அத்தனை பேரும் உரக்கக் கதைத்தும்
நமக்கு காதோரம் கேட்பது
உங்கள் மௌனம் மட்டுமே - அம்மா

வேண்டிய எல்லாமே இருந்தும் - ஏனோ
எதுவுமே இல்லாததைப்போல்
உணர்கின்றோம் - அம்மா

இன்றெம்மிடம் உள்ள எல்லாமுமே - நீங்கள்
அன்றொருநாள் பிரார்த்தனை செய்த
அத்தனையும் தானே - அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"பூம்புகார்"
திருவீதி,
உரும்பிராய் வடக்கு.

கணவர்,
பிள்ளைகள் : சிறோமி, சியாமளி,
சுவே.

# கதவுகளைத் திறந்துள்ளன

## ஐ.தே.க, மற்றும் ஐ.ம.ச. பரஸ்பரம் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 23

உறுப்பினர்களை கட்சியிலிருந்து கட்சிக்கு மாற்றுவதற்கான எதிர்பார்ப்பில் இரு எதிர்க்கட்சிகளும், அதன் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறோம் என அறிவித்துள்ளன.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ரணில் விக்ரமசிங்கவை மாத்திரமே நாடாளுமன்ற உறுப்பினராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகளுமே இவ்வாறு எதிர்பார்ப்பில் உள்ளன.

"கட்சியை விட்டு வெளியேறிய எவருக்கும் கட்சி அதன் கதவுகளை மூடவில்லை" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்திருந்தார்.

"ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலானவர்கள் எங்கள் நண்பர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள்" என்றும் விஜேவர்தன தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஒருவர், "ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு தமது கட்சியின் கதவு திறந்திருக்கிறது எனக் கூறியதோடு, ஒரு நிபந்தனை காணப்படுகிறது எனவும் கூறியுள்ளார்.

"ஊழலால் கறைபடியாத மற்றும் பிணைமுறி ஊழலில் பங்கேற்காத எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருக்கும் கதவுகள் திறந்திருக் கும்." என எதிர்க்கட்சித் தலைவரின் சமூக அபிவிருத்தி செயலாளரும், எதிர்க்கட்சியின் செயற்குழு உறுப்பினருமான ரெஹான் ஜயவிக்ரம ருவீட் செய் துள்ளார்

வேறு கட்சிகளின் உறுப்பினர்களுக்கு கதவுகள் திறந்திருக்கின்றனவா அல்லது திறந்திருக்கும் கதவுகளால் உறுப்பினர்கள் வெளியேற முடியுமா என்பது குறித்து எந்தவொரு கருத்தையும் இரு கட்சிகளும் முன்வைக்க வில்லை. (ஐ-இ)

# கட்டுப்பாடுகளை மீறினால் மீண்டும் பயணத்தடை?

## பொலிஸார் எச்சரிக்கை



**கொழும்பு,ஜூலை 23**

**நாட்டின் பல பகுதிகளில் வீரியம் கொண்ட டெல்டா வைரஸ் தொற்றுப் பரவி வருகின்றமையால், மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம்.**

சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டால், பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சின் ஆலாசனைகளை மக்கள் பின்பற்ற வேண்டியது அவசியம். வார இறுதி நாள்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்கள் செயற்படுவார்களேயானால், கடந்த காலங்களைப் போன்று மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து, சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, வைரஸ் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# கொரோனாவுக்கு ஆண்களே பலி




கொழும்பு,ஜூலை 23

இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களில் அதிகளவானோர் ஆண்கள் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வு பிரிவு தெரிவித்துள்ளது. இதுவரை உயிரிழந்த அனைத்து தொற்றாளர்களிலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 75 வீதம். அத்துடன் 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 24 வீதமானோரும், 30 வயதுக்குக் குறைந்த 1.2 வீதமானோரும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பம் கோரினரென 3 சிப்பாய்கள் கைது



கொழும்பு,ஜூலை 23
போதைப்பொருள் வியாபாரத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமெனில், தமக்கு பணம் வழங்க வேண்டும் என்று, இருவரிடம் பணம் கோரிய 3 இராணுவச் சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிலாபம் நகரத்தில் பெண்ணொருவரிடம் சென்ற இருவர், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாயின் தமக்கு 15 ஆயிரம் ரூபா பணம் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பெண்ணால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இருவரும் பணத்தைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் இராணுவச் சிப்பாய்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேபோன்று கடந்த செவ்வாய்க்கிழமை சீதுவ பிரதேசத்தில் நபரொருவரின் வீட்டுக்குச் சென்ற ஒருவர் 80 ஆயிரம் ரூபா பணத்தைக் கோரியுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நீர்கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் பணத்தைக் கோரிய நபரைக் கைதுசெய்தனர். அவரும் இராணுவச் சிப்பாய் என்பது தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்கள் தொடர்பில் சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை இது தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்து குறித்த சிப்பாய்களை இராணுவத்திலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# சிறுவர்களை தாக்கும் மிஸ்சி



**கொழும்பு,ஜூலை 23**

**கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பின்னர் மிஸ்சி எனப்படும் நோய் சிறுவர்களைத் தாக்கும் வீதம் அதிகரித்துள்ளது என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

இது தொடர்பில் கொழும்பு சீமாட்டி மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் பேராசிரியர் பூஜித விக்கிரமசிங்க தெரிவிக்கையில்,

சமூகத்தில் தற்போது கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறுவர்கள் எந்தளவுக்கு உள்ளனர் என்பதை ஸ்திரமாகக் கூற முடியாது.

காரணம் பெரும்பாலான சிறுவர்கள் எவ்வித அறிகுறியும் இன்றியே தொற்றுக்கு உள்ளானவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் மிஸ்சி என்ற நோய்த் தாக்கம் ஏற்பட்டு காலதாமதமாகி சிறுவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். இதனால் உயிரிழக்கும் அபாயமும் அதிகரித்துள்ளது.

எனவே எவ்வித நோய் அறிகுறிகள் தென்பட்டாலும் தாமதிக்காமல் சிறுவர்களை மருத்துவமனைகளில் சேர்க்க பெற்றோர் தயங்கக்கூடாது.

சிறுவர் மருத்துவமனையில் இதுவரை 10 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். குறித்த 10 பேரும் ஏனைய நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் கடந்த மாதத்தில் உயிரிழந்துள்ளனர். எனவே பெற்றோர் சிறுவர்கள் தொடர்பில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (ஒ-4)

# சலுகை விலைக்கு மசாலா பொருள்கள்



கொழும்பு,ஜூலை 23
தரமுயர்ந்த உள்ளூர் மசாலாப் பொருள்கள் அடங்கிய பொதியொன்று 800 ரூபா சலுகை விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளது என்று கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

சுமார் ஆயிரத்து 350 ரூபா சந்தை பெறுமதி கொண்ட மஞ்சள் தூள், மிளகு, கறி மசாலாத்தூள், கடுகு, வெந்தயம் போன்ற முக்கிய மசாலாப் பொருள்கள் அடங்கிய பொதியை, எதிர்வரும் வாரங்களில் ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் பொதுமக்கள் சலுகை விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# பத்து வருடங்களாக சிறுமி துஷ்பிரயோகம்


## *தொழிலதிபர் மறியலில்*

கொழும்பு,ஜூலை 23
கடந்த பத்து வருடங்களாக சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில், தொழிலதிபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துகிரிய பொலிஸில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். களுபோவில மருத்துவமனையில் மருத்துவர் மேற்கொண்ட பரிசோதனையில் சிறுமி சுமார் பத்து ஆண்டுகளாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுமியும், சந்தேகநபரும் அண்டை வீட்டாராக இருப்பதால் சிறுமியின் பெற்றோர் வீட்டை விட்டு வெளியேறும்போது சிறுமியைப் பாதுகாப்புக்காக சந்தேகநபரின் வீட்டில் தங்கவைத்துள்ளனர்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இந்த முறைகேடு நடந்துள்ளது. சந்தேகநபர் இரண்டு முறை திருமணம் செய்து கொண்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# பரிசோதனைக் கருவிகள் அமெரிக்காவால் கையளிப்பு

கொரோனாத் தொற்றை கண்டறியும் 5 லட்சம் பரிசோதனைக் கருவிகளை, ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கை மதிப்பில் 300 மில்லியன் ரூபா(1.5 மில்லியன் டொலர்) பெறுமதியான கருவிகள், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பினூடாக (USAID) வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆம் திகதி இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய 15 லட்சத்துக்கும் அதிகமான மொடர்னா தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக இந்தக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வைரஸ் தொற்றை மிக விரைவாகக் கண்டறிவதை சாத்தியமாக்குவதன் மூலம், அமெரிக்க மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட கருவிகள், பொதுச் சுகா தாரத்தைப் பாதுகாக்க உதவும் என்று இலங்கை மற்றும் மாலை தீவுக்கான USAID செயற்பணி இயக்குநர் ரீட் ஈஷ்லிமேன் தெரிவித்தார்.

பிறப்பொருளெதிரியாக்கியைக் கண்டறியும் (antigendetecting) இந்தப் பரிசோதனைக் கருவிகள் கொரோனா வைரஸின் இருப்பை நேரடியாகக் கண்டறியும். பரிசோதனையை மேற்கொள்வதற்கு எளிதானவையாக இருப்பதுடன், நேரடிப் பரிசோதனைகளுக்கான விரைவான பரவலா[illegible] அனு கலையும் சாத்தி[illegible] மேலதிக உபகரணங்களோ அல்லது விசேட ஆய்வுகூடங்களுக்கான தேவையோ இந்தப் பரிசோதனைகளுக்கு இல்லாதிருத்தலானது அதிகளவான பரிசோதனைகளை மேற்கொள்ள உதவுகின்றது.

அதிக பெறுமதியான அவசர விநியோகங்கள் மற்றும் முக்கியமான சேவைகளையும் மேலதிமாக அதே மாதிரியான நன்கொடையாக 200 செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் 15 லட்சத்துக்கும் அதிகமான மொடர்னா தடுப்பூசிகளையும் நன்கொடையாக வழங்கி பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கா இலங்கையுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# சைனோஃபோர்ம் 2 மில்லி. வந்தடைவு




கொழும்பு,ஜூலை 23
சீனாவில் தயாரிக்கப்பட்ட சைனோஃபோர்ம் தடுப்பூசியின் மேலும் 2 மில்லியன் டோஸ்கள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளன.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான இரு விமானங்கள் ஊடாக, சீனாவிலிருந்து, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கு தடுப்பூசிகள் எடுத்துவரப்பட்டன. அவை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் விசேட லொறிகளின் மூலமாக கொழும்பில் உள்ள களஞ்சியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

இலங்கைக்கு இதுவரை 9.1 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2021/06

## Regional Directorate of Health Services Jaffna

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 10.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | | From 26.07.2021 until 09.08.2021 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 10.30 P.M on 02.08.2021 | | |
| | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 10.08.2021 | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2021/LM/W/12 | Improvement work at MOH Office Kopay, Jaffna. | 2.31 | 82Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 24,000.00 | Till 09.11.2021 |
| NP/04/41/2021/LM/W/13 | Improvement work at Chest Clinic at Myliddy,Jaffna | 2.59 | 84Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 26,000.00 | Till 09.11.2021 |
| NP/04/41/2021/LM/W/14 | Repair and Renovation of buildings at MOH Area Maruthankerny,Jaffna. | 1.84 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/15 | Repair and Renovation of Office Building at MOH Office Kayts,Jaffna. | 1.11 | 71Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/16 | Construction of Patient waiting Shed at MOH Office Kopay,Jaffna. | 0.37 | 42 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 4,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/PSSP/W/10 | Improvement work at DH Kurunagar and Karaveddy,PMCU Urimpirai and Uduvil | 087 | 67 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/17 | Construction of Patient Waitting area At PMCU Puththtur | 0.64 | 60 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/18 | Renovation of roof at Male,Maternity ward and Kitchen at DH Kodikamam | 2.81 | 86 Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 29,000.00 | Till 09.11.2021 |
| NP/04/41/2021/LM/W/19 | Construction of Security Hut, Vehicle Park and Septic Tank at PMCU Point Pedro. | 0.83 | 66Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/20 | Improvement work at MOH Office Point Pedro | 2.32 | 82Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 24,000.00 | Till 09.11.2021 |
| NP/04/41/2021/LM/W/21 | Construction of Vehicle Garage at MOH Uduvil and Nallur | 1.81 | 66 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/LM/W/21 | Construction of Internal Road MOH Karainagar | 0.22 | 41 Days | C9 and C8 (Buildings) | 1,000.00 | 3,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/PSSP/W/10 | Improvement work at DH Kurunagar and Karaveddy,PMCU Urimpirai and Uduvil | 087 | 67 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/PSSP/W/11 | Improvement Work for Injection room and ETU at PMCU Punnalaikkadduvan. | 0.57 | 65 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 26.10.2021 |
| NP/04/41/2021/MSD/W/02 | Improving Store Facilities at Base hospital Kayts,Jaffna. | 2.78 | 86Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 28,000.00 | Till 09.11.2021 |
| NP/04/41/2021/MSD/W/03 | Improving Store Facilities of Base Hospital,Point Pedro | 2.77 | 86Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 28,000.00 | Till 09.11.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated ,09.10.2020 and 11.01.2020 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை மறித்து தேரர் போராட்டம்

கொழும்பு,ஜூலை 23

பயாகல, ஏதகம, ஸ்ரீ விஜயராமய விகாரையில் ஆண்டுதோறும் நடைபெறும் பெரஹெராவை, நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால், தலைமைப் பதவியில் இருந்த வென். மஸ்தென்னே குணாலங்கார தேரர் வீதியின் நடுவில் அமர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த விகாரையில் பெரஹெரா நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கொரோனாத் தொற்றால் பெரஹெராவை நிறுத்த களுத்துறை நிர்வாக பொதுச் சுகாதார ஆய்வாளர் மற்றும் பயாகல பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். இதனையடுத்து தேரர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (ஒ,4)

# பிரேரணையால் மக்கள் தோல்வி

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 23

வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையால், நாட்டு மக்களே தோற்கடிக்கப்பட்டுள்ளனர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றத்துக்கு ஊடகங்களுக்கு மத்தியில் எதிர்ப்புத் தெரிவித்த பொதுஜன பெரமுன வின் உறுப்பினர்களின் உண்மையான நிலைப்பாட்டை நாட்டு மக்கள் தற்போது நன்கு அறிந்து கொண்டுள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தால் நாட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு எவ்விதத்திலும் நிவாரணம் வழங்கவில்லை.

ஆளும் தரப்பினர் நாட்டு மக்கள் மீது கொண்டுள்ள பற்றை வெளிக் கொண்டு வரும் வகையில், வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன் பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தோம்.

நம்பிக்கையில்லா பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போது ஊடகங்களுக்கு மத்தியில் போலியாக அதிருப்தி தெரிவித்த ஆளும் தரப்பினரின் உண்மைத் தன்மையை நாட்டு மக்கள் நன்கு அறிந்து கொண்டனர். ஆகவே இந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஊடாக நாட்டு மக்களே தோற்கடிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ஒ,4)


**யாழ் வேலை வாய்ப்புகள்**

எம்மிடம் 150 ற்கு மேற்பட்ட யாழ் வேலை வாய்ப்புகள் உள்ளன.
15 வேலை வாய்ப்புகள் இலவசமாகவும், ஏனையவை ரூபா 1000/- கட்டணம் செலுத்தியும் பார்வையிடலாம்.

dewmasweb.com 074 138 3368

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01.08.1950 | மறைவு 23.06.2021

## அமரர் விநாசித்தம்பி கமலநாயகி


அன்பான சின்னக்காவே,
பன்னிரு வயதில் அன்னையை இழந்தேன்
அன்பான உன் அரவணைப்பில் வளர்ந்தேன்
ஆனால் இன்று எம்மை ஆழாத்துயரில்
ஆழ்த்தி விட்டு அமரர் ஆகிவிட்டீரே
வாழ்நாளில் உம்மை மறவோம் மறவோம்

எமது அன்புத் தெய்வத்தின் மரண செய்தி கேட்டு துயரில் பங்கு கொண்டு நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொக்குவில்

ச. சிவலோகநாதன் (சிவா - சகோதரன்)
வத்சன் சுகன்யா (மகள்)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12.03.1945 | விண்ணில் 18.07.2016

## கந்தையா வைகுந்தராஜா

திதி: சதுர்த்தசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அப்பா
மண் விட்டு மறைந்து ஐந்தாண்டுகள்
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எந்நாளும் எம்முடன் இருப்பீர்கள் அப்பா....

ஆடியம்பிட்டி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

# நினைவுகளில்...

4ஆம் ஆண்டு | 27ஆம் ஆண்டு





மலர்வு 10.01.1946 | உதிர்வு 10.09.2017
அமரர் துரைராசா பவானிதேவி

மலர்வு 07.01.1936 | உதிர்வு 21.07.1994
அமரர் தம்பு துரைராசா.

திதி: சதுர்த்தசி ஷஷ்டி (23.07.2021)

**அன்பான பெற்றோரே! அம்மா! ஐயா!**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் - என்பதுபோல
நீங்கள் இருவரும் நடமாடிய எம்மனைகளில்
நிழற்படமாக உள்ளீர்களே - உங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்.

அன்பு மறவாத
சகோதரன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



மண்ணில் 02.12.1950 | விண்ணில் 11.07.2021

## வேலன் லோகநாதன்

### (கீதா மரக்காலை உரிமையாளர்)

பளை வண்ணாங்கேணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் லோகநாதன் கடந்த 11.07.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலன் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சிலோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவலோகநாதன், இன்பநாதன், கீதா, சீதா, கோகிலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தம்பகாம இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வண்ணாங்கேணி வடக்கு,
பளை.

தகவல் :
லோகநாதன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனப்பசளை தயாரிப்பு தொடர்பில் விவசாயிகளுக்கு செயன்முறை பயிற்சி



முல்லைத்தீவு, ஜூலை 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேதனப்பசளை தயாரிப்பு தொடர்பில் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் செயன்முறை பயிற்சி ஒன்று ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி பண்ணையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரான விவசாய செய்கை திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி பண்ணையின் முகாமையாளர் கீ.கீர்த்திகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி யா.சசீலன், வடமாகாண காலநிலைக்கு சீரான விவசாய திட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிபுணர் ஆர்.சஞ்சீவன், விவசாய போதனாசிரியர்கள் மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது விவசாய செய்கைக்கான இயற்கை உரம் தயாரித்தல், அசோலா பாசி உற்பத்தி மற்றும் களைநாசினி தயாரித்தல் போன்ற பயற்சிகளும் வழங்கப்பட்டன. (ஐ-19)


21 ஆம் ஆண்டு நினைவலைகள்



"நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல புதியதொரு வாழ்வின் தொடக்கம்."

அமரர்

திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

தோற்றம்: 26.06.1941 மறைவு : 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. -குடும்பத்தினர்-



முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 19 . 04 . 1962

மறைவு 02 . 08 . 2020

அமரர் பிச்சன் அருணகிரிநாதன்

திதி : (23.07.2021)

ஆண்டொன்று கழிந்தது அப்பா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

300, வீட்டுத்திட்டம், நாவற்குழி குடும்பத்தினர்



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

31 ஆம் நாள் நினைவஞ்சலி



உதயம் 08 . 08 . 1933

மறைவு 23 . 06 . 2021

அமரர் முத்துத்தம்பி சுப்பிரமணியம்

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்.


அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அவரது பிரிவின் போது எமது துக்கத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி உதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

வேல் பவனம்
கோப்பாய் மத்தி, கோப்பாய். குடும்பத்தினர்

## அச்சுவேலி பிள்ளையார் ஆலயத்தில் சுவாமி காவிய இராணுவம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

அச்சுவேலி பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் இராணுவத்தினர் வழிபாடுகளை மேற்கொண்டதுடன் சுவாமி காவியும் உள்ளனர். ஆலயத்தினுள் மேலங்கிகளுடன் ஆண்கள் செல்ல சில ஆலயங்களில் தடை விதிக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினர் குறித்த ஆலயத்தின் வில்லு மண்டபம் வரையில் மேலங்கிகளுடன் சென்று வழிபட்டமைக்கு சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த நிலையில் நேற்றையதினம் வியாழக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெற்றது. கொரோனா அச்சம் காரணமாக ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்கள் பலரும் ஆலயத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்படாத நிலையில் பல இராணுவத்தினர் ஆலயத்தினுள் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன் சுவாமி காவியும் உள்ளனர். (ம-26)

## நீதித்துறை பயிற்சிக் கல்லூரி பரிந்துரைகளுக்கு குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் நீதித்துறைப் பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, உயர் நீதிமன்ற நீதிபதி புவனேக அலுவிஹார தலைமையில் துறைசார் நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகில் நீதிபதிகளுக்குத் தேவையான கல்வியை வழங்குவதற்காகவும், பயிற்சிகளை வழங்குவதற்காகவும் பல்கலைக்கழகத்துக்குச் சமாந்தரமான வகையிலான வசதிகளுடன் கூடிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

நீதித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சட்ட மறுசீரமைப்பு மற்றும் டிஜிற்றல் மயப்படுத்தல் போன்ற துறைகளின் மேம்பாட்டுக்காக அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது. அதேபோன்று நீதிமன்ற நீதிபதிகளின் அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையில் நீதித்துறைப் பயிற்சிக் கல்லூரியை நிறுவுவதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, துறைசார் நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஒ.4)


மரண அறிவித்தல்



குணசேகரம் மயூரன்

பெரியார்குளம் வவுனியாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசேகரம் மயூரன் நேற்று (22.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குணசேகரம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் யோகேந்திரன் (ஓய்வு பெற்ற பல்கலைக்கழக உத்தியோகத்தர்), கலா (ஓய்வூதியர் கட்டடங்கள் திணைக்களம்), மற்றும் மாலா (ஓய்வு பெற்ற இரசாயன கூட்டுத்தாபனம் - கிளிநொச்சி) ஆகியோரின் மருமகனும், தர்சிகா (DMI Kilinochi Branch)இன் பாசமிகு கணவரும் ஜெயந்தினி, கார்த்திகா (Director of Royal Kids Pre School) ஆகியோரின் சகோதரனும் சுகுமார் (ரூபன் பந்தல் சேவை), அகிலன், சசிரேகா ஆகியோரின் மைத்துனரும் சசிகரனின் சகலனும், பதுமிதா, சுதிக்ஷா, சபிக்ஸா, அபிநயன் ஆகியோரின் மாமனும் கரிஷ்னா, சகிஸ்வின் ஆகியோரின் சித்தப்பாவும் தவமணி, சின்னமணி, சித்திரா ஆகியோரின் பெறாமகனும், கோபாலகிருஷ்ணன் - யோகேஸ்வரி தம்பதியரின் ஆசை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார்குளம்
பூந்தோட்டம், வவுனியா

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபலமான காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைக்கு பதவி வெற்றிடம் உள்ளமையால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.



**பதவி நிலை - 1**
**PAC Wealth Planner**
வேலை அனுபவம் : 2 வருடங்கள்
வயது : 25 - 40
சம்பளம் : 40, 000 (நிரந்தரம்)

**பதவி நிலை -2**
**Wealth Planner Manager**
வேலை அனுபவம் : 2 வருடங்கள்
வயது : 25 - 40

**பதவி நிலை - 3**
**Wealth Planner**
வயது : 19 வயதிற்கு மேற்பட்டவர்கள் முழுநேரமாகவோ / பகுதிநேரமாகவோ பணிபுரியலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் உங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை **076 523 1730** என்ற இலக்கத்திற்கு SMS மூலமாக அனுப்பி வைக்கவும்.

**Note :** நிதி நிறுவனம், தனியார் துறை ஆசிரியர்கள் ஆகிய துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.


# மரண அறிவித்தல்



தோற்றம்
03 . 06 . 1947

மறைவு
22 . 07 . 2021

## திருமதி இராசமணி கணபதிப்பிள்ளை

தாவடியை பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு ஊரெல்லை தெரு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி இராசமணி கணபதிப்பிள்ளை** அவர்கள் நேற்று (22.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான நாகப்பு - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் அமரர்களான வேலுப்பிள்ளை - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், ஜீவானந்தன் (லண்டன்), வித்தியா, மோகனா, ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்த சொரூபி (லண்டன்), லோகேஸ்வரன், பிரபாகர் (அமெரிக்கா), நிறேன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தண்ணிலா, ஆத்மிகன், ஆதிரா, பிரத்தியுமன், பிரத்தியுக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பரமேஸ்வரி, இலங்கநாதன் (கனடா), அன்னலக்சுமி, பத்மலீலாவதி, சண்முகநாதன் (அடம்பன்), உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகம்மா, செல்வராணி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு :**
**077 904 7170, 076 233 6300 - கணவர் (இலங்கை)**
**+44 749 416 9858 - மகன் - ஜீவன் (லண்டன்)**
**+44 748 416 1071 - மகள் - ரஞ்சினி (லண்டன்)**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.11.1943

மறைவு
15.08.2019

## அமரர் மயில்வாகனம் காந்தராஜா


திதி : பூரணை (23.07.2021)

**அன்புத் தந்தையே !! ...**

ஈர் ஆண்டோடியும் மனம் மாறாதத் துயரோடும்
உம் நினைவோடும் விழியோடு நீரோடு வழி
கடந்து செல்கின்றோம் .
விளக்கின்றி இருளோடு விண்ணோடு ....
ஒரு பிறையோடும் விடி வெள்ளியாய்
வழிகாட்ட இன்னுயிர் துறந்து இறையோடு
கலந்த உமக்கு கண்ணீர் மலர் தூவி
அஞ்சலிக்கும் இந்நாளில் ...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கின்றோம்.

நெளுக்குளம் , வவுனியா — குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 04 . 1927

மறைவு
22 . 07 . 2021

## திரு. கணபதிப்பிள்ளை நடராசா

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கணபதிப்பிள்ளை நடராசா** அவர்கள் நேற்று (22.07.2021) வியாழக் கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (அனுமதி பெற்ற நில அளவையாளர்), மனோரஞ்சினி (உயிரின மருத்துவ ஆராய்ச்சியாளர் - லண்டன்), சுந்தரமூர்த்தி (ஜேர்மன்), யோகேந்திரன் (MLT - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொற்செல்வி (ஆயுள்வேத வைத்தியர்), தர்மகுலசிங்கம் (பிரித்தானிய தொலைத்தொடர்பகம் - லண்டன்), கலாநிதி (ஜேர்மனி), வத்சலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சரவணமுத்து, இராமநாதன், தேவகுருநாதன் மற்றும் கமலம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லண்டனைச் சேர்ந்த Dr.மீனா, மேனன், தாரணி, ஜேர்மனியைச் சேர்ந்த டிலன், தர்சிகா, தர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 02 . 1950

மறைவு
21 . 07 . 2021

## வல்லிபுரம் இராமநாதன் (நாதன்)

இருபாலையை பிறப்பிடமாகவும் உடுவில் மற்றும் கொல்லன்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராமநாதன் (நாதன்) கடந்த 21.07.2021 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா-பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மகாலக்சுமி (பேபி) இன் அன்புக் கணவரும் இந்திராணி, செல்வராணி (அமரர்), சிவசுப்பிரமணியம், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலுப்பிள்ளை, துரைசிங்கம், ஆனந்தபவானி, கந்தராசா (அமரர்), நவரட்ணம், தனலட்சுமி, மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும், சிறிதரன், சசிதரன், சுரேஸ்தரன், பவானி, சுகந்தினி, அமுதசுரபி, ஞானசுரபி, சுதர்சன், சுதாகரன், தினேஸ், விஸ்னுவர்த்தன் ஆகியோரின் மாமனாரும், சுபானந்தி, சொரூபன், சிந்துராகவன் தயாளினி, தயாநிதி, நேதாயினி ஆகியோரின் சிறிய தந்தையும், சகீலன், மயூரதன், மதுசன், அஜீசன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு ஜூலை...

1983ஆம் ஆண்டு திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதையடுத்து இராணுவத்தினரின் இறுதிச் சடங்கு பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்தே கொழும்பிலும் தமிழர் தாயகத்திலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி ஆரம்பித்த இந்தக் கலவரங்கள், கிட்டத்தட்ட 10 நாள்கள் நீண்டன. திருநெல்வேலியில் தாக்குதல் இடம்பெற்றது ஒரு சனிக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை தமிழர்களுக்கு எதிரான சிங்களக் காடையர்களின் தாக்குதல் தீவிரம் பெற்றது. ஆனால், அரசு ஊரடங்கு உத்தரவை அறிவித்தது திங்கட்கிழமை மாலைதான். இந்தக் கலவரத்தில் கிட்டத்தட்ட 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் ஏதிலிகள் ஆக்கப்பட்டனர். லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்தனர்.

அரச அனுசரணையில்தான் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்று தாக்குதல்கள் இடம்பெற்ற பின்நாள்களில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினர். சுமார் 4 ஆயிரம் தமிழர்கள் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், அப்போது ஆட்சியிலிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, இது தற்செயலாக இடம்பெற்ற விடயம் என்று குறிப்பிட்டு அந்தக் கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களின் மிகப்பெரும் அத்தியாயமும், அத்திபாரமுமான கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிரிழந்தோரை அஞ்சலிப்பதற்கு மைத்திரி - ரணில் கூட்டு அரசின் காலத்தில் தமிழ் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போதைய அரசு கொரோனாப் பெருந்தொற்றைக் காரணம்காட்டி நிறைவேந்தல்களை தடுத்து நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்களால்...

னர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தனிப்பட்ட அரசியல் நலன்களை மையப்படுத்திய அரசின் முறையற்ற செயற்பாடுகளால் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மீண்டும் அடுத்த பதவிக் காலத்துக்காகப் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஆனால், அடுத்துவரும் தேர்தல்களில் அவரோ, பஸில் ராஜபக்சவோ மாத்திரமல்ல, அவரது தந்தை டி.ஏ.ராஜபக்ச வந்தாலும்கூட, தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்புணர்வை இல்லாமல் செய்ய முடியாது.

அதுமாத்திரமன்றி, கொலைக்குற்றவாளி துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பின் விளைவாக நீதிமன்றத் தீர்ப்பு முற்றிலும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. நாட்டின் சட்டம், பொலிஸ், நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்தும் ஜனாதிபதியின் கட்டளையை விடவும் மேலானவை அல்ல என்றால், அவை அவசியமில்லை அல்லவா? தற்போதைய அரசு ஆட்சிப்பீடமேறியதிலிருந்து நாட்டிலுள்ள பெண்களும் சிறுவர்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொதுமக்கள் ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், அரசின் முறையற்ற செயற்பாடுகள் அதனை மேலும் அதிகப்படுத்தியுள்ளன.

அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி பொதுமக்கள் வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள். இவற்றுக்கு மத்தியில், அடுத்த பொலிஸ்மா அதிபராகும் கனவுடன் இருவர் தமது திறமைகளைப் போட்டிபோட்டுக்கொண்டு ஜனாதிபதியிடம் வெளிக்காட்டி வருகின்றார்கள். அவர்கள் அப்பாவிப் பெண்களிடமும் வயது முதிர்ந்தவர்களிடமும் தமது வீரத்தைக் காண்பிக்கின்றார்கள். அவர்கள் இருவருக்கிடையிலான போட்டியால் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்' என்றார். (ம-22)

## துப்பாக்கியால்...

இணைந்து கடந்த 10 மாதங்களே ஆகியுள்ள நிலையில் வீட்டில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாகவே தற்கொலை செய்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-20)

## தீர்வு...

ஜனாதிபதி செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். பேச்சுகளில் ஈடுபட நாம் தயார் என்ற போதிலும், எமது பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு வழங்கப்படும் வரை எமது எதிர்ப்புப் போராட்டங்களை நாம் கைவிடப் போவதில்லை இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட செயலக அதிகாரிகளுடன் நடத்திய பேச்சின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் நீண்ட பேச்சு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தொலைபேசியூடாகக் கலந்துரையாடினார்.

'உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சகல முயற்சிகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள் ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை காணப்படுகின்றது.

அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தொடர்பான வழக்குத் தீர்ப்பு, அமைச்சரவைப் பத்திரம், அரசின் கொள்கைப் பிரகடனம் என்பனவும் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு விரைவில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்' என்று ஜனாதிபதி செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் செவ்வாயன்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் பேச்சுகளை முன்னெடுப்ப தற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகவும், அதனையடுத்து ஜனாதிபதி சம்பள ஆணைக்குழு உள்ளிட்டவற்றுடன் பேச்சுகளை முன்னெடுத்த பின்னர் அவரைச் சந்திப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட போதிலும் இணையவழி கற்பித்தலிலிருந்து விலகியிருத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்பதை நாம் அவர்களிடம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். பேச்சுகளில் ஈடுபட நாம் தயார். ஆனால், எமது பிரச்சினைகளுக்கான உறுதியான தீர்வு அவசியமாகும். அதுவரையில் எமது எதிர்ப்புப் போராட்டங்களை நாம் கைவிடப் போவதில்லை.

ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் மாத்திரமே பேச்சு இடம்பெற்றது. மாலைதீவு ஜனாதிபதி நாட்டுக்கு வருகை தந்துள்ளதால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவைப் பத்திரம் உள்ளிட்டவற்றில் எமக்கு நம்பிக்கை கிடையாது. நாம் எமது போராட்டங்களைக் கைவிட வேண்டுமாயின் அரசு எமக்கான துரித தீர்வுகளை வழங்க வேண்டும்' என்றார். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவிக்கையில், 'எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு (30) முன்னர் ஜனாதிபதியுடனான பேச்சுக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறப்பட்டது. எவ்வாறிருப்பினும் எமது தொழிற்சங்க நடவடிக்கையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறு மாணவர்கள் பாதிப்புக்களுக்கு முகங்கொடுப்பதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது நிர்வாகிகளின் கைகளிலேயே உள்ளது. எனவே, இந்தப் பிரச்சினைகளை தொடர்ந்தும் உதாசீனம் செய்வதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் இடமளிக்கப் போவதில்லை' என்றார். (ம-22)

## கொழும்பில்...

வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது. இதன்போது ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதி கள் ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்று ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டனர். இந்தப் பேரணி காரணமாக கொழும்பின் பல வீதிகளிலும் நேற்று கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (ம-22)

## பால்மா...

ளின் விலை அதிகரிப்பு, கப்பல் கட்டணம் அதிகரிப்பு, டொலருக்கு நிகரான ரூபாவின் வீழ்ச்சி என்பன காரணமாக, பால்மா விலைகளை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர். எனினும், அதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## 104 கிலோ...

கடத்தப்பட்ட நிலையிலேயே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து 104 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. இலங்கை கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-113)

## யாழ்.நகரப்...

என்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. முதியவரின் இறப்புக்கு என்ற காரணம் என்று தெரிவிக்கப்படவில்லை. (ம-27)

## 4000 ஐ நெருங்கும்...

நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 பெண்களும், 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 959ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## கொரோனா...

மைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 91 ஆயிரத்து 291ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 997 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 64 ஆயிரத்து 755ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

# 5,000 ரூபா கொடுப்பனவில் அதிகளவு முறைகேடுகள்

### விசாரணையில் தகவல்

கொழும்பு,ஜூலை 23

கொரோனாத் தொற்றால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு, கடந்த காலங்களில் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் பல முறைகேடு கள் நடந்திருப்பது தெரியவந்துள்ளது என்று தேசிய தணிக்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொகையை விட அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து பிரதேச செயலாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் காரணமாக இழந்த பணத்தை அரசு மீட்டெடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தைத் தவிர அனைத்து மாகாணங்களிலும் தணிக்கை குழுவால் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விரிவான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் இன்று!

**டோக்கியோ, ஜூலை 23**
**ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் சர்வதேச ஒலிம்பிக் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு அமைய இந்தத் தொடர் நடைபெறுகின்றது.**



இந்தத் தொடர் கடந்த வருடம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது. அடுத்த மூன்று வாரங்களுக்கு இந்தத் தொடர் நடைபெறும்.
தொடருக்காக சுமார் 13 ஆயிரம் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் டோக்கியோவில் முகாமிட்டுள்ளனர்.
300க்கும் மேற்பட்ட பதக்கங்களுக்காக பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒலிம்பிக் தொடரில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன்படி வீர,வீராங்கனைகள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுவது தடை செய்யப்பட்டுள்ளது. பதக்கங்கள் பெறுவதற்காகச் செல்லும்போது மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அத்துடன் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உடலுறவில் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. (ம)



# இந்தியா - இலங்கை இறுதியாட்டம் இன்று

கொழும்பு, ஜூலை 23
இந்தியா, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
இந்தத் தொடரில் முடிவடைந்த இரண்டு ஆட்டங்களிலும் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளதுடன், கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறுகின்றது. சொந்த மண்ணில் வழித்துத் துடைக்கப்படாமல் குறைந்தது ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெறுவதற்கு இலங்கை அணி இன்று முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பது தொடர்பில் எதிர்பார்ப்புள்ளது. (ம)



# டோக்கியோ ஒலிம்பிக் கொரோனா பரவலாம்!

*உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 23
டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் கொரோனா பரவும். இதைத் தவிர்க்க முடியாது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.
ஒலிம்பிக் தொடருக்காக சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் ஜப்பானில் முகாமிட்டுள்ளனர். இவர்களில் 64 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.
அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா பாதிப்பு புள்ளி விபரத்தின் மூலம், ஒலிம்பிக் போட்டியில் வைரஸ் பாதிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. வைரஸ் பிரச்னையை முற்றிலும் ஒழிப்பதென்பது முடியாத காரியம். விளையாட்டு வீரர்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரை விரைவாக அடையாளம் கண்டு, தனிமைப்படுத்த வேண்டும். இதன்மூலம் நோய் பரவலை கட்டுப்படுத்தலாம். அத்துடன் வீர, வீராங்கனைகளுக்கு அன்றாடம் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம)

# 2032 ஒலிம்பிக் பிரிஸ்பெய்னில்




டோக்கியோ, ஜூலை 23
2032ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் பிரிஸ்பெய்னில் நடைபெறும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.
2032ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்து, இந்தோனேசியா, ஹங்கேரி, ஆஸ்திரேலியா, சீனா, கட்டார், ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகள் விண்ணப்பித்திருந்தன. இவற்றை பரிசீலனை செய்த சர்வதேச ஒலிம்பிக் சங்கம், ஆஸ்திரேலியாவைத் தெரிவு செய்துள்ளது. இதன் படி ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் நகரில் ஒலிம்பிக் தொடர் நடத்தப்படவுள்ளது. ஆஸ்திரேலியா ஏற்கனவே இரண்டு முறை ஒலிம்பிக் தொடரை நடத்தியுள்ளது. 1956ஆம் ஆண்டில் மெல்பேர்னிலும், 2000ஆம் ஆண்டில் சிட்னியிலும் ஒலிம்பிக் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ம)

# கொரோனாவிலிருந்து மீண்டார் ரிஷப் பன்ட்



லண்டன், ஜூலை 23
கொரோனாவில் இருந்து மீண்டுள்ளார் இந்திய அணியின் இலக்குக் காப்பாளரான ரிஷப் பன்ட். சுமார் 10 நாள்கள் தனிமை மற்றும் உச்சக்கட்டப் பரிசோதனைகளுக்குப் பின்னர் அவர் அணியுடன் இணைந்தார்.
இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள விராட் கோலி தலைமையிலான இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்த நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இந்திய வீரர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் ரிஷப் பன்ட் கொரோனாவால் பாதிக்கப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து பன்ட் தனிமைப்படுத்தப்பட்டதுடன் தொடர்ந்து மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டார். தற்போது பன்ட் கொரோனாவிலிருந்து மீண்டுள்ளார். அவர் அணியுடன் இணைந்து பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார். (ம)



2032ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கு ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், பிரிஸ்பெய்ன் நகரில் நேற்று வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. (ம)

**வேலையாள்கள் தேவை**
யாழில் இயங்கும் பிரபல கட்டட நிறுவனம் ஒன்றிற்கு திறமையான **மேசன்** மற்றும் **கூலியாள்கள்** உடனடியாக வேலைக்குத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 008 5853, 077 332 2463

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் அமையவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு ஊழியர்கள் தேவை.
**மருந்தாளர், மருந்தக உதவியாளர் (பெண்)**
முன் அனுபவம் உள்ள உதவியாளர்கள் விரும்பத்தக்கது.
தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு 077 839 0669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.